# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**பிப்ரவரி 2002 ஜீவியம் 7 மலர் 10**

## இம்மாத மலரில்..........

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| லைப் டிவைன் | 12 |
| இம்மாதச் செய்தி | 20 |
| சாவித்ரி | 21 |
| சிறு குறிப்புகள் | 23 |
| அன்பர் கடிதம் | 30 |
| லைப் டிவைன் - கருத்து | 33 |
| அஜெண்டா | 35 |
| வாழ்க்கையின் முக்கியமான இடங்களைப் பற்றி அன்னை அன்பர்கள் அறிய வேண்டிய கருத்துகள் | 37 |
| பரிணமிக்கின்ற ஒரு ஜீவனின் வாழ்க்கையில் நடக்கின்ற ஒரு நாள் நிகழ்ச்சிகள் | 47 |
| பகவானுடைய இதர நூல்கள் | 55 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 57 |

❊ ❊ ❊

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**681) அன்னை, ஸ்ரீ அரவிந்தர் அவதாரங்கள் மனிதனுக்கு எடுத்துக்காட்டாக மட்டும் அமையவில்லை. மனிதன் செய்ய வேண்டிய வேலைகளைத் தாங்களே செய்தார்கள். விவசாயம், வியாபாரம், பாங்க், மானேஜ் மெண்ட் ஆகிய இடங்களில் நாம் விஷயத்தைச் சொல்லிக் கொடுத்தால் மட்டும் போதாது. நாமே செயல்படுத்திக் காண்பிக்க வேண்டும்.**

*யோகத்தைச் செய்ய வந்த அவதாரங்கள் அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும்.*

உலகம் தடம் மாறிப் போகும் என்ற நேரத்தில், எப்படிப் போகக் கூடாது, எப்படிப் போக வேண்டும் என்று எடுத்துக்காட்டாக இருக்க அவதாரங்கள் உலகத்தில் எழுந்தன. தாங்கள் பிறருக்குச் சொல்லியதைத் தங்கள் வாழ்வில் வாழ்ந்து காட்டினார்கள். அதுவே இதுவரை அவதாரங்கள் நிலை. விஞ்ஞானி புதிய கருவியொன்றைக் கண்டுபிடித்தால் அது பெரிய சேவை, ஆச்சரியம். அவர் கண்டு பிடித்ததை உலகம் பெற்று அனுபவிக்க வியாபார ஸ்தாபனங்கள் (commercial product) விற்பனைக்குரிய பொருளாக அதை மாற்றி உலகுக்கு வழங்குகிறார்கள். விஞ்ஞானியே அதைச் செய்வதில்லை.

அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் உலகம் பொய்மையிலிருந்து விடுபட்டு, மரணத்தை வென்று, மனிதன் சத்திய ஜீவனாகலாம் என்றனர். அதை மனிதன் ஏற்றுச் செய்ய வேண்டும். அவர்களே மனிதன் செய்ய வேண்டியதைச் செய்ய முன் வந்தனர். தாங்களே யோகத்தை மேற்கொண்டனர். அவதாரமாக எழுந்த புருஷனுக்குத் தவம், யோகமில்லை. ஆனால் அவர்கள் அதை ஏற்றனர். இறைவன் எங்களைப் பணித்திருக்கிறான் என்றனர். இது அவதாரங்களுடைய நிலைக்கே புதியது என்றார் அன்னை.



அரசனுக்கும், அரசனின் நிர்வாகத்திற்கும் கடமைகள் உண்டு. முக்கியமாக எதிரியைத் தோற்கடித்து விரட்ட வேண்டும். நாட்டில் நீதியை நிலை நிறுத்த வேண்டும். இதுவே அரசனின் கடமை. அரசுக்கு அதற்கடுத்தாற்போல் தர்மம் உண்டு, கடமையில்லை. 1967லிருந்து உலக அரசுகள் சத்திய ஜீவியத்தின் ஆட்சிக்குள் இருப்பதாக அன்னை சொல்கிறார். அதுவும் தாம் சொல்வதாகச் சொல்லவில்லை. பகவான் அன்னையை சூட்சும உலகில் சந்தித்து இதைச் சொன்னார் என்றார். சேர சோழ பாண்டியர் நாட்டிலும், இராம இராஜ்ஜியத்திலும், தர்மர் ஆண்ட நாளிலும், அசோக சாம்ராஜ்யத்திலும், டெல்லியில் சக்ரவர்த்திகள் ஆட்சி செய்த நாட்களிலும், ரோமாபுரியிலும், விக்டோரிய மகாராணியின் ஆட்சியிலும், நம் குழந்தைகட்குப் பாடம் கற்பிப்பது நம் கடமை. நம் வாழ்வைச் செப்பனிடுவது நம் பொறுப்பு. நாம் ஒரு தொழில் செய்ய முதலைத் தேடுவது நம் குடும்பப் பொறுப்பு. எந்த அரசாங்கமும் அதை உலகில் 1950வரை ஏற்றுக் கொண்டதில்லை.

பிள்ளைகள் படிப்பிலிருந்து, வீடு கட்டுவதுவரை, வேலை தேடுவது முதல், தொழில் நடத்துவதுவரை இன்றைய இந்திய அரசாங்கம், குடிமகன் பொறுப்பைத் தான் ஏற்றுக் கொண்டு செயல்படுகிறது. அதைப் பின்பற்றி ஏராளமான நாடுகள் அதேபோல் செயல்படுகின்றன. இது சத்திய ஜீவிய சக்தி செயல்படும் வகை.

அன்னை பக்தர்கள் விவசாயத்தில் புது முறையைக் கண்டாலும், புதிய மானேஜ்மெண்ட் முறைகளை வகுத்தாலும், அவற்றை உலகுக்குத் தெரிவிப்பதுடன் நிறுத்த முடியாது. நாமே செயல்படுத்தி நடைமுறையில் அவற்றுள் அன்னை சக்தி வெளிப்படுவதைக் காட்ட வேண்டும்.

அவதாரப் புருஷன் யோகத்தை ஏற்றதுபோல், அரசாங்கம் குடிமகனின் பொறுப்பை ஏற்றதுபோல், புது முறைளைக் காணும் பக்தர்கள், அவற்றைச் செயல்படுத்தும் கடமையையும் ஏற்க வேண்டியது முறை. இதுவே அவர்கள் பாதையில் நாம் செல்வதை ஊர்ஜிதப்படுத்தும்.

❊ ❊ ❊

**682) பிரபஞ்சம் மனிதனில் தன்னைச் செறித்து காண்பதுபோல், யோகத்தை மேற்கொண்டவர் தம் ஆன்மாவில் நிலைப்பட வேண்டும். வாழ்வு பிரபஞ்சமாகிறது. ஆன்மா அதன் மையமாகிறது.**

*உடலே பிரபஞ்சம், ஆன்மாவே ஜீவாத்மா.*

ஆன்மா உலகில் பிறப்பெடுக்க உடலை உற்பத்தி செய்து ஏற்று அதனுள் தன்னைப் பொதித்தது என்பது மரபு. அதேபோல் சச்சிதானந்தம் தன் உடலாகப் பூமியை உற்பத்தி செய்தது என்கிறார் பகவான்.

பிரபஞ்சம் என்பது பிரகிருதி (இயற்கை). தான் உயர்ந்து பரமாத்மாவையடைய பிரபஞ்சம் விழைகிறது. பிரகிருதியின் பிரபஞ்சம் ஆன்மாவான பரமாத்மாவை நேரடியாக அடைய முடியாது. எனவே தன்னுள் உள்ள ஆன்மாவைக் கண்டு, அதன் நிலையை அளவுகடந்து உயர்த்தி அதன் மூலம் பரமாத்மாவை அடைய வேண்டும் என்று பிரபஞ்சம் முடிவு செய்தது. அதற்காக (**individual soul**) ஆன்மாக்களை ஆயிரக்கணக்கில் பிரபஞ்சம் உற்பத்தி செய்தது. தன்னை செறிவடையச் செய்த புள்ளிகளே ஆன்மாக்கள். இப்படி உற்பத்தியான ஆன்மா, தனக்கென ஒரு சாதனையைச் செய்து ஒரு சிறு கூட்டுக்குள் தன்னை அமைத்துக் கொள்கிறது. கூட்டுக்குள் வளர்ந்து, வளர்ச்சி முடிந்தபின் கூட்டை அழித்து, பிரபஞ்சம்வரை வியாபித்து, பிரபஞ்சத்தை ஆன்மீக வலுவடையச் செய்கிறது. ஆயிரக்கணக்கான ஆன்மாக்கள் வளர்ந்து கூடுகளை அழித்து பிரபஞ்சம் முழுவதும் பரவி பிரபஞ்சத்தின் ஆன்மீக நிலையை உயர்த்தினால், உயர்வு ஒரு கட்டத்தைத் தாண்டும்பொழுது பிரபஞ்சத்தின் ஆத்மா, பரமாத்மாவை எட்டும். ஆன்மா உள்ள கூடே அகந்தையாகும்.

மனிதன் பிரபஞ்சத்தின் சிறு உருவம் (miniature). மனிதன் பிரபஞ்சம்போல் வளர, அவனது ஜீவனுடைய கரணங்களில் ஆன்மா



உற்பத்தியாகவேண்டும். கரணங்களின் ஆன்மாவுக்கு சைத்தியப் புருஷன் எனப் பெயர். மனம், உணர்வு, உடல் ஆகியவற்றில் சைத்தியப் புருஷன் உற்பத்தியாகி அவற்றிற்குள்ள கூடுகளை அழித்து வெளிவந்து, கரணங்களின் ஆத்மா, ஜீவனின் ஆத்மாவாகி ஜீவாத்மா, தான் மாற்றமற்றது என்ற நிலையிலிருந்து மாறி, வளர ஆரம்பித்து, பிரபஞ்சத்தின் ஆத்மாவுடன் ஐக்கியமாக வேண்டும்.

பிரபஞ்சத்தின் பரிணாமமும், மனிதனுடைய பரிணாமமும் ஒரே வகையானவை. மனிதனுடைய பிரபஞ்சம் அவன் உடல். அவன் உடல் திருவுருமாற்றமடைந்தால், பிரபஞ்சம் திருவுருமாற்றமடையும். உடலின் திருவுருமாற்றத்தை உலகில் அன்னையின் உடல் தவிர வேறெதுவும் ஏற்கும் திறனுடையதன்று என்ற பகவான் சொல்லியதன் பொருள், அன்னையின் உடல் பூமியையும், பிரபஞ்சத்தையும் நேரடியாகக் குறிப்பிடுகிறது என்றாகிறது. ஆரம்ப நாட்களில் அன்னை தம்முடல் பூமியுடன் இரண்டறக் கலந்ததைக் குறிப்பிடுகிறார். அதை, பகவான், Vedic experience வேத காலத்து ஆன்மீக அனுபவம் என்றார். அன்னைக்குப் பிறகு வெளிவந்த அவருடைய பேச்சுகளில், தம்முடல் பிரபஞ்சம் முழுவதும் (physically expanded) பரவித் தழுவியதாக எழுதியுள்ளார். அன்னையின் உடல் பிரபஞ்சத்தின் பிரகிருதி. கடைசி நாட்களில் தாம் இறைவனாக சில நிமிஷம் மாறியதை விவரிக்கின்றார். பிறகு அந்நிலை பல மணி நீடித்ததையும் எழுதுகிறார். அன்னையே இறைவனான பின், அவருடல் இறைவனின் திருவுடலான பிரபஞ்சம். மேலும் சொன்னால் பிரபஞ்சத்தையும் தம்முட் கொண்ட சிருஷ்டியை அன்னையுடல் குறிக்கிறது.

பூரணயோகம், பூமாதேவியைத் திருவுருமாற்றி, பிரபஞ்சத்தையும் திருவுருமாற்ற, இறைவனை பூவுலகுக்குக் கொண்டுவர முயல்கிறது. அதுவே அதன் இலட்சியம். இறைவனின் சக்தி - சத்தியஜீவிய சக்தி - பூமியில் 1956இல் இறங்கி வந்து அன்றிலிருந்து செயல்படுகிறது.

❋ ❋ ❋

**683) நாலு பேர் எதிரில் மனிதன் முறையற்று நடப்பதில்லை. மனச்சாட்சிக்குட்பட்டவன் எண்ணத்தால் ஊறு செய்வதில்லை. யோகி தன் ஆழ்ந்த மனத்தினின்று தவற்றையும், தீமையையும் அகற்ற வேண்டும்.**

- ***மனிதன் செயலில் தூய்மையானவன்,***
- ***மனச்சாட்சி எண்ணத்தின் தூய்மை,***
- ***யோகம் ஜீவியத்தின் தூய்மை.***

மனித வாழ்வு கெட்டதை விட்டகன்று, நல்லதை நாடுகிறது. தீமையை அழித்து நன்மையை ஆதரிக்கிறது. முறைகெட்டதைத் தவிர்த்து முறையை ஏற்கிறது. இதை விவரிக்கும் நிலைக்கு மனிதனை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. சமூகம் தன் தோற்றத்தை ஏற்றுக் கொண்டால் போதும் என்ற சாமானிய மனிதன். இவன் மேல் மனத்தின் மேற்புறத்தில் வாழ்பவன்.
2. தன் நெஞ்சம் தன்னை ஏற்க வேண்டும் என்ற நெறியான மனச்சாட்சிக்குட்பட்ட மனிதன். இவன் மேல் மனத்தின் ஆழத்தில் உணர்வால் வாழ்பவன்.
3. தான் ஏற்ற ஆன்மீகக் கொள்கையின் உறைவிடமான ஆழ்மனம் தன்னை அங்கீகரிக்க வேண்டும் எனும் யோகி. இவன் உள்மனத்தில் வாழ்பவன்.

வீட்டில் பழைய கந்தலை உடுத்தினாலும், வெளியில் நல்ல உடையோடு காணப்பட வேண்டும் என எல்லா வசதிகளுக்குமுரிய பணத்தையும் உடைக்குச் செலவிடுவது வழக்கம். தோற்றம் முக்கியம், படிப்பில்லாவிட்டாலும் பட்டம் முக்கியம், பவுனில்லாவிட்டாலும் பவுன் போன்ற தோற்றமுள்ள நகை முக்கியம், நல்ல சாப்பாடில்லாவிட்டாலும், வீட்டில் T.V. இருப்பதாக அனைவரும் நினைக்க வேண்டும் என்று மனிதன் எல்லா நிலைகளிலும் பாடுபடுகிறான். வசதியில்லாதவன்



வசதியான தோற்றத்தையும், வசதியிருந்து குடும்பச் சுமுகமில்லாதவன் சுமுகமான தோற்றத்தையும், செல்வமிருந்து புகழில்லாதவன் தோற்றத்தில் புகழும் நாட நாள்தோறும் முயல்கிறான். இவர்கள் சாமானியர்கள். பிறர் பொருளைத் தீண்டக்கூடாது, உதவி கேட்கக் கூடாது, பொறாமைப்படக் கூடாது, உதவி செய்யத் தவறக்கூடாது, மனத்தாலும் ஒரு தவற்றைச் செய்தல் கூடாது என்று மனச்சாட்சியை தெய்வமாக்கி வாழ்பவர் சதவீதக் கணக்கில் குறைவாக இருந்தாலும் ஓர் ஊரில் பல நூறு நல்ல மனிதர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்குத் தோற்றம், நாலு பேர் சொல்வது இரண்டாம்பட்சம். தன் நெஞ்சம் சுடக் கூடாது, பதற்றப்படக் கூடாது, நெஞ்சில் எழும் உணர்வு உத்தரவு அளிக்காவிட்டால் அவர்களால் செயல்படமுடியாது. இவர்களை மனிதத் தன்மையுடைய நல்ல மனிதர்கள் என்போம்.

யோகியின் இலக்கு மோட்சம். அவனுடைய பாதையில் தோற்றத்திற்கு வேலையில்லை. மனச்சாட்சி ஏற்றால் போதாது. மனம் அறியாத நிலையில் ஆழ்மனம் அவன் ஏற்ற பாதைக்கு ஊறு செய்வதை ஏற்றல் கூடாது. ஆழ்மனம் ஏற்பதை சூழலும், கனவும், தியானமும், சகுனமும், புற நிகழ்ச்சிகளும், அகவுணர்வுகளும், அவனுக்கு உணர்த்தியபடியிருக்கும். ஆழ்மனம் தூய்மையாக இல்லாமல், யோகப்பாதையில் யாத்திரையில்லை. கததவை அணுகலாம். திறக்காது. மனச்சாட்சி திறனற்றுப் போகும் சொர்க்க வாயில் அது.

❈ ❈ ❈

**684) ஆன்மாவைப் பொறுத்தவரை தவறில்லை. மனச்சாட்சி தீமையைக் கண்டதும் விலகுகிறது. சமூகம் பொது இடத்தில் தவறிழைக்க அனுமதியில்லை.**

- ***ஆன்மாவுக்கு அனைத்தும் சரி.***
- ***மனச்சாட்சி தவற்றை அனுமதிக்காது.***
- ***சமூகம் தவறான நடத்தையை அனுமதிக்காது.***

சமூகத்தில் வெளித்தோற்றம் முக்கியம். உள்ளே எப்படியிருந்தாலும் கேள்வியில்லை. மனச்சாட்சிக்கு உள்ளேயுள்ள மனநிலை முக்கியம், தோற்றமன்று. ஆன்மாவுக்குத் தோற்றம் இல்லை. உள்ளேயுள்ள மனநிலையும் முக்கியமில்லை. ஏனெனில் ஆன்மாவுக்குத் தீமை என்பதில்லை, தவறு என்பதில்லை, குற்றம் கிடையாது அதனால் மன்னிப்பு கிடையாது. பாவம் என்பதை மனிதன் உணர்கிறான். ஆன்மா பாவ, புண்ணியங்கட்கு அப்பாற்பட்டது.

கோதுமை மாவைப் பூரியாகத் திரட்டினால், பூரி உருவாகும் பொழுது சில சமயங்களில் கொஞ்சம் மாவை எடுக்க வேண்டியிருக்கிறது. அது விரயமன்று. புத்தகத்திற்கு அட்டை போட அட்டைப் பேப்பரை வெட்டினால் துண்டுகள் விரயமாகின்றன. பூரிபோக மீதி மாவு விரயமாவதில்லை. அடுத்த பூரியாகிறது. இயற்கை (nature) என்பதன் செயலில் அட்டை போடும் பேப்பர் போன்ற நிலையில்லை, பூரி மாவு போன்ற நிலையுண்டு. நமக்கு விரயமாகத் தெரிவது, இயற்கைக்கு விரயமன்று. வேறொரு காரியத்திற்குப் பயன்படுகிறது. வாழை குலை தள்ளிய பின் மரத்தை வெட்டினால் அதை வீசுகிறோம். குளித்தால் தண்ணீர் சிதறுகிறது. சிதறிய நீர் விரயமாகி சாய்க்கடையில் போகிறது. சமையல் செய்தால் உபயோகமாகாத காய்கறியின் பகுதிகள் வீணாகின்றன. இன்று படித்த பேப்பர் நாளைக்குப் பயனில்லை. அது நமக்கு விரயம். இயற்கை எனும் தொழிற்கூடத்தில் துண்டான பேப்பர் மண்ணோடு மட்கி அது புதுப் பொருள் உற்பத்தியாக உதவுகிறது. குலை தள்ளிய வாழை நிலத்திற்கு உரமாகிறது. குளித்துச் சாய்க்கடையில் போகும் நீர் பூமிக்கடியில் சேருகிறது. இயற்கையின் செயல்கள் பல்லாயிரம். மனிதனுக்குத் தேவையான செயல்கள் ஆயிரம். தனக்குப் பயன்படாதவை தனக்கு விரயம். அவை இயற்கைக்கு விரயமல்ல. நாம் செயல்படாத இடங்களில் நம் கண்ணுக்குத் தெரியாத வகையில் இயற்கை செயல்பட்டுக் கொண்டேயிருப்பதால் எதுவும் இயற்கைக்கு உதவும். அதேபோல் சமூக வாழ்வில் ஏற்கக் கூடியது, ஏற்க முடியாதது



என இரு பிரிவுகளுண்டு. மனச்சாட்சி நன்மை, தீமை என, செயல்களைப் பிரிக்கிறது. ஆன்மாவுக்கு இதுபோன்ற பாகுபாடுகள் இல்லை. அனைத்தையும் செயல் எனக் கருதுகிறது. அவற்றை ஆண்டவனின் செயல் என அறிகிறது. ஆண்டவனின் செயலை பாவம் என்று சொல்ல முடியுமா? ஏற்கக் கூடாதது என்று சொல்லலாமா? தீமை என்று பாகுபாடு செய்ய முடியுமா? முடியாதல்லவா?

நாம் மனத்திலிருந்து நினைக்கிறோம். உணர்விலிருந்து செயல்படுகிறோம். ஆன்மா நினைப்பதில்லை, உணர்வதில்லை, செயல்படுவதில்லை, பாகுபாடு செய்வதில்லை. சாட்சியாகச் செயல்களை தன் ஆன்மீகத் திருஷ்டியால் பார்க்கிறது. நாம் கண்ணால் பார்த்து மனத்தால் அறிகிறோம். ஆன்மா கண்ணும், மனமும் தேவைப்படாமல், சூட்சுமப் பார்வையால் - திருஷ்டியால் - பார்க்கிறது.

* * *

## 685) அருளை அடையாளம் காண்பது நன்றியறிதல்.

***இறைவனை செயலில் காண்பது நன்றியறிதல்.***

கிராமத்திலிருந்து நகரத்திற்கு வர தூரம் 5 மைலானாலும், 10 மைலானாலும் நடந்துதான் வரவேண்டும். 1950இல் பஸ்ஸில் போகும் பொழுது நெடுஞ்சாலையில் தலைச்சுமையுடன் சாரி சாரியாக மக்கள் போவதைக் காணலாம். பஸ்ஸில் போக வசதியுள்ள ஊருக்கும், ஊரிலிருந்து ரோட்டிற்கு 2 மைல், 5 மைல் என நடந்து வரவேண்டும். அந்த இரண்டு மைலுக்குப் பஸ் வேண்டும் என புதுத் தலைமுறைகள் கேட்டபொழுது டவுனுக்கு 12 மைலும் நடந்தே போய்ப் பழக்கமானவன், என்ன வேடிக்கை இது வீட்டு வாயிற்படிக்கும் பஸ் வேண்டுமா உனக்கு எனக் கேட்டான். அதுபோன்ற கிராமத்தில்

பஸ் வரும்பொழுது திருவிழாபோல் கொண்டாடி பஸ்ஸை வரவேற்றார்கள். புதியதாக வருவதை - போன், பஸ், பள்ளி, துணி, பேனா, விளக்கு, விவசாயம், லாரி, சாக்கு - முதலில் ஆரவாரமாக நாம் வரவேற்கிறோம். இன்று கம்ப்யூட்டருக்கு அதுபோன்ற வரவேற்புண்டு. Speed postக்கு, டெலிபோன் பூத், மிக்ஸி, காஸ், கிரைண்டர், மொப்பெட், ஸெராக்ஸ் போன்றவற்றை வரவேற்கிறோம். பழையவற்றை நாம் இருப்பதாக வைத்துக் கொண்டு (take for granted) அவற்றைக் கவனிப்பதில்லை.

இவையெல்லாம் 50 வருஷங்களாக வந்தவை இதற்கு முன் 500 வருஷமாக, 5000 வருஷமாக வந்த நிலம், வீடு, கிணறு, ஏரி ஆகியவற்றை இன்று நாம் நினைப்பதேயில்லை. ஆண்டவன் ஆதி நாளிலிருந்திருக்கிறான். மனிதன் உற்பத்தியாகி 31 இலட்சம் வருஷமாகிறது என்று accurate துல்லியமாகக் கணக்கிட்டு இருக்கிறார்கள். ஆண்டவன் அதற்கு முன்னிருந்து பூவுலகில் ஆட்சி செலுத்துகிறான். அவன் அளித்ததே சூரியன், சந்திரன், மரம், மழை ஆகியவை. பஸ்ஸில் போகும்பொழுது இந்த பஸ்ஸை அருள் தாங்குகிறது என நாம் அறியமுடிவதில்லை. நாம் சும்மா உட்கார்ந்திருக்கும்பொழுது மூச்சுவிடுவது அருளால் எனத் தெரிவதில்லை. சுவாசம் சிரமமாகி, டாக்டர் மருந்து பலிக்காத பின், டாக்டர் கைவிட்ட பிறகு, பிரார்த்தனையால் சுவாசம் எழுந்தால் அருள் செயல்படுவதை அறிகிறோம். ஆன்மாவுக்கு நன்றி சொல்கிறோம். அதுவே சும்மா சுவாசம் வந்தால் அருளின் செயல் என அறிவதில்லை. அறிந்தால் அது நன்றியறிதல்.

சினிமாவை நாம் பார்ப்பதற்கும், அதை டைரக்ட் செய்தவர் பார்ப்பதற்கும் உள்ள வித்தியாசம் அது. டைரக்டருக்கு ஒவ்வொரு சீனும், அதிலுள்ள பொருள்களும், மனிதர்களும், சொற்களும் தாமியற்றியவை எனத் தெரியும். சினிமாவை டைரக்டர் பார்ப்பதைப் போல், நாம் பார்ப்பது அறிவு, தெளிவு.



இன்று ஆண்டவன் மனித உருவில் உலவினால் அத்தனைச் செயல்களும் அவன் செயலே என அவன் அறிவான். அதுபோல் நாம் அறிந்தால் அது அருளை அடையாளம் காண்பதாகும். அதனால் நன்றியுணர்வு எழும். அது பலிக்க நாம் ஆண்டவனாகும் பாதையில் அடி எடுத்து வைக்க வேண்டும். பூரணயோகம் வகுத்த பாதை அதுவேயாகும்.

❋ ❋ ❋

*...தொடரும்*

## ஜீவிய மணி

செயல் வாழ்வின் கரு.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆதாயம், இலாபம், பொருள் நம் இலட்சியத்தை இன்று நிர்ணயிக்கின்றன. இது மாறி, இலட்சியம் இவற்றை நிர்ணயிக்கும் நிலைமை ஏற்பட்டால், அன்னையை நாம் வாழ்வில் ஏற்றுக் கொள்வதாகும். இதற்கு முதற்படியாக இலாபத்தைக் கொண்டு இலட்சியத்தை நிர்ணயிப்பதை விட்டுவிட வேண்டும்.

*இலட்சியத்தை நிர்ணயிக்க இலாபம் அளவுகோலன்று.*

# லைப் டிவைன்

கர்மயோகி

## X. Conscious Force

**We can suppose Existence is conscious.** *Page No. 84*
**We can think it to be a Conscious Being.** *Para No. 11*
**Then the problem arises.**
**We can suppose otherwise.**
**It may be a Conscious Being.**
**We may say it is subject to its nature of Force.**
**It is compelled by the Force.**
**The Being, we can say, has no option.**
**It has no choice to decide its course.**
**Its manifestation or otherwise is decided by the Force.**
**Of course, the Tantrics have such a God.**
**The Mayavadins too do so.**
**They subject the Purusha to Shakti or Maya.**
**It is a Purusha involved or controlled by Maya.**
**Obviously such a god is not supreme.**
**It is not the supreme infinite Existence.**
**We did start with that.**
**This is only a formulation of Brahman.**
**It is the Brahman in the cosmos.**
**This is logically anterior to Shakti or Maya.**



## 10. சித் - சக்தி

**சத் என்பது ஜீவனுள்ளது எனலாம்.**
**சத் என்பது ஜீவனுள்ள ஜீவன் எனலாம்.**
**அப்படி எனில் பிரச்சினை எழும்.**
**நாம் வேறு வகையாகவும் கூறலாம்.**
**அதை தன்னயறியும் ஜீவன் எனலாம்.**
**தன் இயல்பான சக்திக்குட்பட்டது அது எனவும் கூறலாம்.**
**அதன் சக்தியால் அது கட்டாயப்படுத்தப்படுகிறது.**
**சத் புருஷனுக்கு வேறு வழியில்லை.**
**என்ன செய்யலாம் என்ற சுதந்திரம் அதற்கில்லை.**
**சிருஷ்டிப்பதா இல்லையா என சக்தி நிர்ணயிக்கும்.**
**இது தந்திர யோகத்தின் தெய்வம்.**
**மாயாவாதிகளும் அதையே செய்கிறார்கள்.**
**புருஷனை சக்திக்கும், மாயைக்கும் உட்படுத்தினர்.**
**மாயைக்குட்பட்ட புருஷன் அது.**
**இது முழு முதற் கடவுளில்லை.**
**உச்சகட்ட அனந்தமான சத்புருஷன் இது இல்லை.**
**நாம் அதையே ஆரம்பமாகக் கொண்டோம்.**
**இதுவும் பிரம்மத்தாலானதே.**
**பிரபஞ்சத்தின் பிரம்மம் இது.**
**சக்திக்கும், மாயைக்கும் முன்னுள்ள பிரம்மம் இது.**

**This takes her back from her works.**
**It takes back into its transcendental being.**
**We started with a conscious existence.**
**It is absolute.**
**It is independent of formations.**
**It is not determined by its works.**
**It has an inherent freedom to manifest or not to manifest.**
**It manifests its potentiality of movement.**
**A Brahman may be compelled by Prakriti.**
**In that case, it is not Brahman.**
**But it is an inert Infinite.**
**It has an active content in it.**
**It is more powerful than its continent.**
**It is a conscious holder of Force.**
**But his Force is his master.**
**We may say, it is compelled by itself as Force.**
**It is done so by its own nature.**
**Even then, we do not get rid of its contradictions.**
**Our first postulate is evaded thus.**
**This takes us back to an Existence.**
**It is really nothing but Force.**
**It is Force at rest.**
**It may be Force in movement.**
**Perhaps it is absolute Force.**
**But it is not absolute Being.**



**அவளுடைய செயலைவிட்டு அகற்றுகின்றனர்.**
**அகற்றியவளை, ஆத்மாவின் நிலைக்கு அழைத்துச் செல்கிறாள்.**
**நாம் தன்னையறிந்த சத் புருஷனில் ஆரம்பித்தோம்.**
**அது தனித் தன்மையுடையது.**
**தன் ரூபங்களைக் கடந்தது அது.**
**தன் செயலால் கட்டுப்படாதது.**
**சிருஷ்டிப்பதா இல்லையா என முடிவு செய்யும் சுதந்திரம் உடையது.**
**தன் (பீஜமான) வித்தான சக்தியை வெளிப்படுத்தவல்லது.**
**பிரம்மத்தை பிரகிருதி கட்டாயப்படுத்தலாம்.**
**அது உண்மையானால், அது பிரம்மமில்லை.**
**அது ஜடமான அனந்தம்.**
**தன்னுள் ஜீவனுள்ளது அந்த ஜடம்.**
**பாத்திரத்தை விட அது சக்தி வாய்ந்தது.**
**சக்தியைத் தன்னுள் அடக்கியுள்ளது.**
**ஆனால் சக்தியே பெரியது.**
**பிரம்மம் அதன் சக்தியால் ஆளப்படுகிறது எனலாம்.**
**தன் சுபாவத்தால் அப்படிச் செயல்படுகிறது.**
**அப்படியும் பிணக்குகள் அழியவில்லை.**
**நம் ஆரம்பத் தத்துவத்தை நாம் கை விடுவதாகும்.**
**நாம் மீண்டும் சத் புருஷனிடம் வருகிறோம்.**
**அது சக்தியன்றி வேறன்று.**
**சலனமற்ற சக்தியது.**
**சலனத்திலுள்ள சக்தியாகவுமிருக்கலாம்.**
**தூய்மையான சக்தியாக இருக்கலாம்.**
**தூய்மையான புருஷனாக இருக்கலாம்.**

**Next is the relationship between Force and Consciousness.**

*Page No. 84*
*Para No. 12*

**What is consciousness?**

**Mental waking consciousness is consciousness for us.**

**Man possesses it in his bodily existence.**

**It is during the major part of his life.**

**His methods of sensation are superficial.**

**Sleep deprives him of this sensation.**

**It can also be deprived otherwise.**

**Even when stunned, man loses it.**

**This is a narrow sense.**

**Thus consciousness is an exception, not the rule.**

**This is the order of the material universe.**

**We do not always possess it.**

**This is a vulgar shallow idea.**

**Thus we understand the nature of consciousness.**

**This colours our thought.**

**Our associations are governed by it.**

**Now we think philosophically.**

**This vulgar idea must go away from here.**

**Sleeping is an unconscious state.**

**At least it is apparently so.**

**When drugged, we are equally so.**

**In a swoon, we have no consciousness.**

**While stunned, we lose consciousness.**

**At all these times, there is something in us.**



**சக்திக்கும் ஜீவியத்திற்கும் என்ன தொடர்பு?**

**ஜீவியம் எனில் என்ன?**

**விழிப்பில் நாம் நம்மை அறிவது ஜீவியம்.**

**உடலின் வாழ்வில் நாம் அதை அறிவோம்.**

**நம் வாழ்வில் பெரும் பகுதி அது.**

**உணர்வு பெறுவது மேலெழுந்தவாரியானது.**

**தூக்கத்தில் உணர்விருக்காது.**

**வேறு வகையாகவும் உணர்வை இழக்கலாம்.**

**திகைப்பிலும் உணர்வு மாறும்.**

**இது குறுகிய பார்வை.**

**எனவே ஜீவியம் என நாம் கூறுவது விலக்கு, சட்டமில்லை.**

**இதுவே ஜட உலகின் சட்டம்.**

**எந்நேரமும் ஜீவியமிருக்காது.**

**இது மூட நம்பிக்கை.**

**ஜீவியத்தை இந்த விதமாக நாம் அறிகிறோம்.**

**நம் எண்ணம் இப்படி மாசுபடுகிறது.**

**நம் எண்ணங்களும், உணர்வுகளும் இதனால் பாதிக்கப்படுகின்றன.**

**தத்துவத்திற்கு வருவோம்.**

**மூட நம்பிக்கை விலக வேண்டும்.**

**தூக்கம் உணர்வற்ற நிலை.**

**பார்வைக்கு அப்படித் தோன்றும்.**

**மருந்தால் மயக்கமுற்றாலும் அப்படியே தோன்றும்.**

**மயக்கமடைந்தாலும் உணர்விருக்காது.**

**திகைத்தால் உணர்வு மறுத்துப் போகும்.**

**இந்நிலைகளிலெல்லாம் நாமிருக்கிறோம்.**

It is conscious when we are 'unconscious'.
These are the unconscious states of our being.
It is the physical being.
We call our waking state conscious.
It is only a small selection from the whole.
The whole is the entire conscious being.
That is what the old thinkers said.
We are now sure of it.
This is not even our whole mentality.
It is only the surface.
There is the subliminal.
It is behind it.
It is much vaster.
It is also subconscient.
Both are the greater parts of ourselves.
They contain height.
Profundities too are in it.
No man has yet fathomed it or measured it.

...contd

❊ ❊ ❊.



நாம் உணர்வற்ற நிலையிலும் உயிரோடிக்கிறோம்.
நாம் உணர்வை இழந்த நிலைகள் இவை.
அது உடல்.
நாம் விழிப்பாக உள்ளபொழுது உணர்வோடிருப்பதாக நினைக்கிறோம்.
பெரிய முழுமையிலிருந்து எடுத்த சிறு பகுதி இது.
முழுமை என்பது ஜீவனுள்ள முழு ஜீவன்.
அதையே தத்துவ ஞானிகள் கூறினர்.
இன்று அது உண்மை எனத் தெரிகிறது.
இது நம் முழு மனமில்லை.
இது மேல் மனம்.
அடி மனம் உண்டு.
அது பின்னாலுள்ளது.
அது பரந்தது.
அது ஆழ்மனம்.
இரண்டும் நம் பெரும் பகுதிகள்.
நம் உயர்வுள்ள இடங்கள் அவை.
நம் பெருமைகள் உள்ளதும் இங்கேதான்.
எவரும் இதைக் கண்டதில்லை, அளந்ததில்லை.

...தொடரும்

❊ ❊ ❊

# இம்மாதச் செய்தி

*"அபரிமிதமான பணம் அவசியம்"*

**நாம் காற்றை அளவோடுதான் சுவாசிக்க முடியும். அதிகம் பயனில்லை. அளவோடு காற்றை அனுபவிக்க காற்று அபரிமிதமாக இருக்கிறது. பணத்தை அளவோடு பயன்படுத்த பணம் காற்றுப்போல் அபரிமிதமாக இருக்க வேண்டும்.**

*"Abundance is essential for use without greed or possessiveness".*

❊ ❊ ❊





**P. 21. And burst the bounds of consciousness and Time**

**ஜீவியத்தின் எல்லையை உடைத்தெறிந்தது;**
**காலத்தைக் கடந்தது**

மரணம் வாழ்வின் உரிமை. மரணத்தால் வாழும் வாழ்வை சுற்றியுள்ள கதவுகளை ஆட்சி செய்வது விதி. அக்கதவைத் திறக்கும் உரிமையை இழந்தவன் மனிதன். அதை ஒருவன் செய்ய வேண்டுமெனில் அவன் வீரன். அவன் காலத்திற்குட்பட்டவனாக இருந்தால் அவன் வீரம் பலன் தாராது.

**வீரம் உயர்ந்து காலத்தைக் கடந்த சிகரத்தினின்று எழும்பும் வீரன் அக்கதவை எட்டலாம், தட்டலாம், திறக்கலாம், உடைக்கலாம்.**

**வீரம் காலத்தைத் தடுத்து நிறுத்தும்.**

**சிருஷ்டியே அறியா வண்ணம் காலச் சக்கரத்தைப் பின்னோக்கிச் சுழலச் செய்யும்.**

**ஜீவன் நடந்து வந்தால், சந்தர்ப்பம் என்ற உலகில் தன்னைக் காண்கிறது.**

**அவனுள் உள்ள லோகமாதா - சாவித்ரி - எழுவதால்,**

**காலமும், மரணமும் அவனுக்குக் கட்டுப்படுகின்றன.**

**காலத்தைக் கடந்து மட்டுமன்று,**

**காலத்தை உற்பத்தி செய்த ஜீவியத்தையும் கடக்கின்றது.**

- *மரணத்திற்கு மரண அடி.*
- *முடிய கதவைத் திறக்கும் உரிமை.*

- காலத்தைக் கடந்த சிகரத்தின் கனவெனும் வீரன்.
- விதியின் கதியைக் கூவி நிறுத்தியது.
- காலச் சக்கரம் கருத்தின்றி சுழல்வதைத் தடுத்து நிறுத்திப் பின்நோக்கச் செய்தது.
- ஜீவனின் சுவடு சந்தர்ப்பத்தைச் சந்தித்தது.
- விதியின் இரும்புப் பிடியிலிருந்து ஜீவன் எழுந்து தன்னை அறிவித்தது.
- லோகமாதா அவனுள்ளிருந்து எழுந்தாள்.
- தெய்வத்தின் திருமுகம் மறைவினின்று வெளிவந்தது.
- இறைவன் மனிதனில் மேலும் ஓர் வெற்றியைப் பெற்றான்.
- சத்தியம் வீறுகொண்டு தழலென எழுந்தது.
- மிருகமான யந்திரத்தின் பின் உள்ள பிரம்மமான இறைவன்.

❊ ❊ ❊

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அநேகமாக, பிரார்த்தனை என்பது இறைவனை அவனுடைய கடமையிலிருந்து திருப்பும் முயற்சியாக இருப்பதுண்டு. இறைவனின் செயலிலிருந்து மனிதன் மாறுபட்ட விருப்பத்தை நாடுவதாலும், அந்த விருப்பம் பூர்த்தியாகாதபோது, இறைவனைப் பூர்த்தி செய்யும்படி கேட்பதாலும், பிரார்த்தனைக்கு இக்குணம் ஏற்படுகிறது.

*இறைவன் என் சேவகன் என்பது பிரார்த்தனையின் கொள்கை.*





# 'காரியம் கூடிவருவது'

## (Decision - making)

ஒருவர் செய்யும் காரியங்களெல்லாம் கூடிவந்தால் அவர் வெகுநாள் நம்முடனிருக்கமாட்டார். வாழ்வின் உச்சியை எட்டிவிடுவார் என அறிகிறோம். இதன் இரகஸ்யத்தை எட்ட அனைவரும் முயல்கிறோம். முடிவதில்லை. இதனுள் உள்ளது ஒரு இரகஸ்யம்.

**அந்த இரகஸ்யம் நாம் அனைவரும் அறிந்தது.**

சொல்வதற்கு எளிமையானது. அதை நாம் அன்றாட வாழ்வில் தவறாது பின்பற்றுகிறோம். அதன் அம்சங்கள் இரண்டு.

1. வேலைக்குரிய பொருள்கள் ஒன்றும் குறையாமலிருக்க வேண்டும்.
2. வேலையைச் செய்ய மனத்தில் எந்தக் குறைவும் இருக்கக் கூடாது. மனம் நிறைவாக இருக்க வேண்டும்.

இந்த இரு நிபந்தனைகளும் பூர்த்தியானால் காரியம் தவறாது கூடிவரும் என்பது நமது அனுபவம். இந்த உண்மை அனைவரும் அறிந்தது, எவரும் மறுக்க முன்வர மாட்டார்கள். விளக்கம் தேவைப்படாது. இது உண்மையானால் ஏன் நமக்கெல்லாம் ஏராளமான காரியங்கள் கூடிவருவதில்லை? அதற்குரிய ஒரே காரணம்,

**இந்த எளிய சட்டத்தைப் புறக்கணித்து வேலை செய்வதால் காரியம் கூடிவருவதில்லை.**

காரியம் கூடிவரவில்லை என்றவுடன் மனிதன் செய்யும் முதற் காரியம் ஜோஸ்யம் பார்ப்பது, அடுத்தாற்போல் சுவாமிக்குப்

பிரார்த்தனை செய்வது, விரதமிருப்பது, நோன்பு கொண்டாடுவது, குலதெய்வத்திற்குக் காணிக்கை செலுத்துவது, சீட்டு கட்டுவது, சிபார்சு தேடுவது, லஞ்சம் கொடுக்க முன்வருவது, பிறரைக் குறை கூறுவது, தலைவிதியை நொந்துகொள்வது, ஜெயித்தவனைக் கண்டு பொறாமைப்படுவது, பிறரழிய முனைவது, வம்பு பேசி மனதைத் திருப்தி செய்வது போன்ற சுபாவத்தின் வெளிப்பாடுகள் அனைத்தும் வரிசையாய் எழும். சிறிது யோசனை செய்தால் காரியங்கள் எப்படி நடக்கின்றன என்றால்,

1. சர்க்கார் சட்டப்படியும்,
2. சமூக நியாயப்படியும்,
3. வாழ்க்கையின் வலுவைப் பொருத்தும்,
4. மனச்சாட்சியின் தர்மப்படியும் காரியங்கள் நடக்கின்றன.

இவை அடுத்த நிலைகள். மனிதன் ஒவ்வொரு கட்டமாக முன்னேறுகிறான். முன்னே போனவன் பின்னே வரமுயன்றால் முடியாது, நஷ்டம் வரும். இவற்றைக் கடந்தது அன்னையின் அருள். எந்த நிலையில் நாமிருந்தாலும் அந்த நிலையில் முதலில் சொன்ன இரு நிபந்தனைகள் - தேவை, மனநிறைவு - பூர்த்தி செய்யப்பட்டால், காரியம் தவறாது கூடிவரும். நமக்குத் தெரிந்து கூடிவந்த காரியங்களில் இந்த நிபந்தனைகள் பூர்த்தியானதும், பூர்த்தியாகாத இடங்களில் கூடிவரவில்லை எனவும் தெளிவாகக் காணலாம். இனி நாம் மேற்கொள்ள இருக்கும் முக்கியக் காரியம் கூடிவர வேண்டுமானால்,

**இவ்விரு நிபந்தனைகள் பூர்த்தியாக வேண்டும் என்பது மட்டுமே நிபந்தனை.**

நம் அன்றாட வாழ்வில் இதுபோல் ஏராளமான காரியங்கள் நாம் செய்வதையும், இனி செய்ய வேண்டிய காரியத்திற்கும் அதுவே சட்டம் என்பதையும் நாம் ஏற்பதில்லை. நமக்கு ஒரு முக்கியப் பொறுப்பு வந்தவுடன், நாம் நம் மனப்போக்குப்படி - கோயில் சீட்டு, ஜோஸ்யம்



பார்ப்பது போன்றவை - நடப்பதற்குப் பதிலாக மேலே சொன்ன இரண்டு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய முனைவது சரி.

புது ஊருக்கு வந்திருக்கிறோம், ரேஷன் கார்டு வேண்டும், நம்மூரிலிருந்து phone இவ்வூருக்கு மாற்றவேண்டும் என்பவை எளிய வேலைகள். நான் மனை வாங்கியுள்ளேன். வீடு கட்ட வேண்டும், என் மகன் 8 வருஷமாக இன்ஜினியராக இருக்கிறான், சொந்தமாகத் தொழிலாரம்பிக்க வேண்டும் என்பவை பெரிய வேலைகள். இவற்றுள் பலர் அனுபவம் நம்முன் உள்ளன.

1. பணம் கொடுத்து கார்டு பெற்றவர் ஒருவர்.
2. சிபார்சால் கார்டு பெற்றவர் மற்றவர்.
3. பணம் கொடுத்தும் கிடைக்காதவர், சிபார்சிருந்தும் சிரமப்படுபவர் எனச் சிலர்.
4. எதுவுமில்லாமல் நேரே போய் பல நடை நடந்து கார்டு, போன் பெற்றவர்கள் பிறர். நடக்காமலும் பெற்றவர் சிலர்.
5. வீடு கட்டப் படாதபாடுபட்டவர், எளிதாகக் கட்டியவர், அதிகச் செலவு செய்து சீக்கிரம் முடித்து, கடைசி வேலைக்கு அலைந்தவர், இனி வீடு வாங்கலாம், கட்ட முயலக் கூடாது என முடிவு செய்தவர் எனப் பல அனுபவங்கள்
6. தொழிலாரம்பித்து சீக்கிரம் கூடி வந்து கோடீஸ்வரனானவர்.
7. திவாலானவர்.
8. ‘தொழில் என ஆரம்பிப்பது பைத்தியக்காரத்தனம்’ என முடிவு செய்தவர்.
9. ஊழல் அதிகாரிகளிடமும், தொழிலாளிகளிடமும் போராடி B.P., sugar வந்ததுதான் மிச்சம் என்பவர்.
10. நிறைய சம்பாதித்து நிறைய பிரச்சினைகளுடன் வாழ்பவர்.

உலகத்து அனுபவங்கள் பல. ரேஷன் கார்டு, phone, வீடு கட்டுவது, தொழிலாரம்பிப்பது ஆகியவற்றிற்குத் தேவையான பணம்,

ரிக்கார்ட், நிபந்தனை, முயற்சி என உண்டு. இவற்றைக் குறைவற ஒருவர் பூர்த்தி செய்திருந்தால் அவர் மனத்தில் பல வகையான மாற்று உணர்ச்சிகளிருக்க வாய்ப்புண்டு.

- ***பணம் கொடுக்காமல் கார்டு வாராது.***
- Phone ***நமக்கு வந்தால் பக்கத்து வீட்டுக்காரர் வந்து இனாமாகப் பேசுவார்.***
- ***வீடு என் பெயரில் இருக்க வேண்டும், பிள்ளைகள் சம்மதிக்க மாட்டார்கள்.***
- ***காண்ட்ராக்டர் திருடுவதை நான் என்ன செய்ய முடியும்?***
- ***பணம் கொடுத்தால் காண்ட்ராக்டர் கட்டுகிறான், இதில் என்ன அதிசயமிருக்கிறது?***
- ***சர்க்காருக்கு ரேஷன் கார்டு தர வேண்டிய கடமை உண்டன்றோ?***

நடைமுறையை மனம் ஏற்பதும், பிணக்கான எண்ணம் தோன்றுவதும், நடைமுறைக்கு ஒவ்வாதவற்றை மனம் நம்புவதும் நம்மிடம் காணப்படுபவை. **மனம் தவறான, குறையான எண்ணங்களை ஏற்கக் கூடாது, நம்பக்கூடாது என்பது நிபந்தனை.** வேலையிருக்கிறது. செய்ய வேண்டும். முறையோடு செய்ய வேண்டும். இல்லாததை எல்லாம் எதிர்பார்க்கக் கூடாது என்று மனம் உறுதியாக இருக்கவேண்டும். அப்படியிருந்தால் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தியாகின்றன. காரியம் முயற்சிக்குக் கூடிவரும்.

நம் அனுபவங்களை 4 வகைகளாகப் பிரிக்கலாம்.

1. உள்ளும் புறமும் சரியாக இருந்து காரியம் கூடிவருவது.
2. புறம் சரியாக இருந்து, மனம் குறையாக இருப்பதால் ஆரம்பிக்கச் சிரமப்பட்டு ஆரம்பித்து, பிறகு வேலை சரியாக முடிவது.
3. அகமோ, புறமோ சரியாக இல்லாததால் ஆரம்பிக்கவே முடியாத நிலை.
4. மனம் நிறைவாக இருந்து புறம் சரியாக இல்லாததால், எளிதாக ஆரம்பித்துக் குறையாக நிற்பது.



நிறைவை +எனவும், குறைவை −என்றும் எழுதினால், கோட்டிற்கு மேல்புறம், அகம் எனவும், கோட்டிற்கு வலப்புறம், புறம் எனவும் கொண்டால், மேற்கூறிய நான்கு மனநிலைகளை இப்படத்தால் விவரிக்கலாம்.

நம் காரியம் ① கட்டத்திலிருந்தால் தடையில்லாமல் கூடிவரும். முறையாக ஆரம்பித்து முறையாக நடந்து, எதிர்பார்த்த பலன் தரும்.

***இந்த விதிக்கு விலக்கில்லை.***
***இது விலக்கில்லாத விதி.***




②, ③, ④ கட்டங்களில் நம் திட்டமிருந்தால், அக்குறையை நீக்கி நாம் முதற்கட்டத்திற்கு வரமுடியுமானால், காரியம் பூர்த்தியாகும்.

கம்ப்யூட்டர் poetry செய்யுள் எழுதுகிறது, spellings திருத்துகிறது, ஆங்கில இலக்கணம் பயின்று, கட்டுரையைத் திருத்துகிறது, மெஷின்களை ஓட்டுகிறது, விமானத்தை ஓட்டுகிறது. இவற்றிற்கெல்லாம் தேவையான திறன் பெரியது. இந்த decision-making processஐ 4 கட்டங்களிலும் விவரிக்கலாம். கடந்த காலத்தில் நடந்து வெற்றி பெற்றது, 60% முடிந்தது போன்ற திட்டங்களை இந்த software programmeஇல் கணக்குப் பார்த்தால் துல்லியமாகச் சரியாக இருக்கும். இதுபோன்ற software programme உலகுக்கு உதவும்.

அன்னை அன்பர்கட்குப் பொதுவான சூழல் எந்தக் குறையையும் ஓரளவு நிறைவு செய்யக் கூடியது. அவர்கட்குக் காரியம் கூடிவருவது இயல்பு. இந்த programme அவர்கட்குச் செய்யும் காரியத்தைப் பலமடங்கு சிறப்புடன் உயர்த்தப் பயன்படும். ①ஆம் கட்டத்தில் காரியம் கூடிவரும். புதியதாக கடை வியாபாரம் ஆரம்பித்தவர் இந்தச் சட்டப்படி வெற்றியடைந்து மாதம் 20,000ரூ. சம்பாதித்தால், அவரே

அன்பரானால் 40,000ரூபாயாக வரும். மேலும் முதற்கட்டத்தையே அடிப்படையான முடிவாகக் கொண்டு அதையே 4 பாகமாகப் பிரித்தால், 40,000 ரூபாயை 4 லட்சமாக உயர்த்தப் பயன்படும்.




படம் Iஇல் வெற்றி, தோல்வி என்பவற்றை 4 நிலைகளாகப் பிரித்தோம். IIஆம் படத்தில் ரூ. 20,000 இலாபம் அடிப்படையில் உண்டு. அதுவே அன்பர்க்கு ரூ. 40,000 என உண்டு. இந்த ரூ.40,000 கிடைப்பதை IIஆம் படத்தில் முழுத் தோல்வியான 3ம் நிலைக்கும், 4 லட்சம் வருமானத்தை 1ஆம் நிலைக்குமாக வைத்து Decision Making முடிவை எடுக்கலாம்.

IIஆம் படத்தில் 1ஆம் கட்டத்தை மேலும் 4 பாகங்களாகப் பிரித்து தொடர்ந்த முன்னேற்றம் பெறலாம். **முன்னேற்றத்திற்கு முடிவில்லை, தோல்விக்கு வழியில்லை.**

நாம் உலகம் அன்னையை ஏற்கவில்லை என வருத்தப் படுகிறோம். எப்படி அன்னையை உலகுக்கு அளிக்க முடியும் என இரவு பகலாக விரும்பும் அன்பர்கள் ஏராளம். ஒருவர் தாமே உலகுக்கு அன்னையை அளிக்க விரும்பினால்,



- அவர் அன்னையை மேலும் மேலும் உண்மையாக ஏற்றுக் கொள்ளவேண்டும்.
- அவர் ஏற்றுக் கொண்டது உண்மையானால் கீழ்க்கண்டவை நடக்கும்.

  - அனைவரும் அவரை அழிக்க முயல்வர்.
  - மயிரிழை அலட்சியமாக இருந்தால் உலகம் அவரை அழித்து விடும்.
  - அப்படி அழிவிலிருந்து தப்பினால் அவர் வாழ்வில் உள்ளும் புறமும் அன்னை பொங்கி வழிவார்.
  - புறத்தில் செய்வது அவர் வாழ்வில் பலிக்கும்.
  - ***அகத்தில் சித்தித்தது, அகிலத்தில் பலிக்கும்.***

Decision Making முடிவு, தீர்மானம் என்பது வாழ்வில் நுட்பமான பகுதி. அம்மையத்தில் அன்னையை ஏற்றால், மேற்கண்ட முறை அதிகமாகப் பலிக்கும்.

- **எந்த ஒரு காரியமும், சிறியதோ பெரியதோ தவறாமல் கூடிவருவது அன்னையை ஏற்றதற்கு அடையாளம்.**
- **இந்த programmeமைப் பயன்படுத்தினால் அதே பலன் உண்டு.**
- **அன்னை அன்பர் இதைப் பயன்படுத்தினால் அதிகப் பலன் உண்டு.**

நான்கு கட்டங்களில் முதற் கட்டத்தை மேலும் மேலும் பிரித்து உயர்ந்த பலனை அடைவதை அன்னை முறைப்படி உள்ளே செய்யலாம். அன்னை முறை என்பது சத்தியம் பேசுவது. வாயால் உண்மை பேசுவது முதற்கட்டம். மனதால் பொய்யை மறுப்பது அடுத்த உயர்ந்த கட்டம். கடந்த காலப் பொய்யை சமர்ப்பணத்தால் மெய்யாக மாற்றுவது அதனினும் உயர்ந்த மூன்றாம் கட்டம். அன்னையின் மூன்றாம் கட்டம் programmeஇல் முப்பதாம் கட்டத்திற்குச் சமம்.

❊ ❊ ❊

## அன்பர் கடிதம்

ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய
ஓம் ஆனந்தமயி சைதன்யமயி சத்தியமயி பரமே

பகவான் ஸ்ரீ அரவிந்தர் மஹாசக்தி அன்னை மலர்ப்பாதங்களே சரணம்.

அன்புக்கடல் அன்னையின் பேரருளால் என் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்வுகளைக் குறிப்பிடும் முன் பகவான் ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீஅன்னை ஆகியோரை நான் வணங்கிட வழிவகுத்த எனது மைத்துனர் அவர்களுக்கும், அவர் தம் துணைவியாருக்கும் எனது நன்றியினை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

### *உயிர் காத்த அன்னை :*

பாண்டி சென்று என் அலுவல்களை முடித்துக் கொண்டு சமாதித் தரிசனம் முடித்து ஊர் திரும்பும்போது இயற்கை உபாதை கழிக்க அம்பத்தூர் பேருந்து நிலையம் பின்புறம் சென்ற போது நீர் நிறைந்திருந்த 10 அடி ஆழம் உள்ள கழிவு நீர் தொட்டியில் தவறி விழுந்துவிட்டேன். ஒரு கையில் சூட்கேஸுடன் அன்னை அருளால் யார் உதவியும் இன்றி மேலே வந்து உயிர் பிழைத்தேன். சத்தம் கேட்டு ஓடி வந்த ஆட்டோ ஓட்டுநர்களும், பொதுமக்களும் திகைத்து நின்று விட்டார்கள். ரெண்டு நாட்களுக்கு முன் வேறு ஒருவர் விழுந்து கயிறு கட்டி நாங்கள் தூக்கிக் காப்பாற்றினோம். நீங்கள் எப்படி எந்தப் பிடிப்பும் இல்லாத தொட்டியினுள்ளிருந்து சூட்கேஸுடன் மேலே வந்தீர்கள் என்பதை நினைக்கவே இயலவில்லை எனக் கூறினார்கள். உயிர் காத்த அன்னைக்கு நன்றி.

### *மகள் கல்வியில் அன்னை :*

பத்தாம் வகுப்பில் எங்கள் மகள் படித்துக் கொண்டிருக்கும் போது பொதுத் தேர்வுக்கு முன்பாக நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர்



சந்திப்பின் போது ஆசிரியைகள் என் மனைவியிடம் உங்கள் பெண் இதுவரை நடந்த தேர்வுகளில் எதிலும் மதிப்பெண்களே பெறவில்லை. ஆகவே அவள் பொதுத் தேர்வில் தேறுவது மிகவும் கடினம் எனக் கூறிவிட்டார்கள். அதற்கு என் மனைவி நான் வணங்கும் அன்னை மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. அவள் நிச்சயம் நல்லமுறையில் மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெறுவாள், +1 உங்கள் பள்ளியிலேயே சேர்ப்பேன் எனக் கூறி வந்தார். அவ்வாறே பொதுத்தேர்வில் 65% மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெற்றாள். +2 தேர்வு சமயத்தில் வணிகவியல், கணித இயல், பொருளாதாரத்தில் அனைத்துத் தேர்வுகளிலும் குறைந்த மதிப்பெண்களே பெற்றிருந்ததால் அந்த ஆசிரியைகள் பள்ளி முதல்வரிடம் இவளைத் தேர்வுக்கு அனுப்ப வேண்டாம் எனக் கூறியபோது மஹா சரஸ்வதி அன்னையின் அருள் முதல்வர் மூலம் செயல்பட்டு, அவள் பொதுத்தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெறுவாள். கவலை வேண்டாம் எனக் கூறிவிட்டார். மஹாசரஸ்வதி ஸ்ரீ அன்னை அருளால் +2 தேர்வில் 77% மதிப்பெண்கள் பெற்று மகள் தேர்வு அடைந்தாள். எதிர்வரும் காலங்களிலும் அன்னை அருள் பூரணமாய் கிடைக்க அன்னையிடம் வேண்டுகிறோம்.

### *வீடு கொடுத்த அன்னை :*

என் மனைவியின் அலுவலகக் கடன் பெற்று வீடு வாங்கலாம் என முயன்று பல இடங்களில் பார்த்தும் எங்கள் திருப்திக்கேற்றவாறு அமையவில்லை. மனதிருப்திக்கேற்றவாறு கிடைத்த வீடு இந்தியன் வங்கியில் அடமானத்திலிருந்தது. மேலும் பல பிரச்சனைகளும் இருந்தன. மஹாசக்தி அன்னையிடம் கேட்டபொழுது வாங்கலாம் என உத்திரவு கிடைத்தது. அதன் பிறகு தைரியமாக அன்னையின் அருளைத் துணை கொண்டு ரூ. 5.10 லட்சத்திற்கு பேசி முடித்தோம். பத்திரப்பதிவு மற்ற செலவுகள் எல்லாம் சேர்த்து ரூ.6 லட்சங்கள் தேவைப்பட்டது. அலுவலகக் கடன் ரூ. 3.5 லட்சம் மட்டுமே. கையில் இருந்த பணம், நகை போன்றவற்றை விற்றால் கூட ரூ. 75 ஆயிரம்

மட்டுமே கிடைத்தது. மீதம் பணத்திற்கு ஏற்பாடு செய்கின்ற பொறுப்பையும் மஹாசக்தி அன்னையிடமே விட்டுவிட்டோம். அதன் பிறகு என் மனைவியின் உயர் அதிகாரி அவர்கள் ரூ. 50,000உம், என் மைத்துனர் ரூ. 50,000உம், என் அலுவலகத்தில் பணி புரியும் சகோதரி ரூ. 45000உம் கொடுத்து உதவ பத்திரப்பதிவு செய்து முடித்தோம். பிறகு ஒரு நன்னாளில் புஷ்பாஞ்சலி செய்தோம். மஹாசக்தி அன்னைக்கும் தக்க சமயத்தில் பண உதவி செய்த நல்ல உள்ளங்களுக்கும் நன்றி.

*காணாமல் போன சூட்கேஸ் :*

கடந்த 18.05.2001 அன்று மயிலாடுதுறையில் நடைபெற்ற என் தமக்கையின் மகள் திருமணத்திற்குச் சென்று விட்டு திருவாரூர் திரும்பும்போது பேருந்திலேயே ஒரு சூட்கேஸை தவறவிட்டுவிட்டோம். ஸ்ரீ அன்னையிடம் பிரார்த்தித்து அதை அவர்களுக்கே சமர்ப்பணம் செய்திட 17 நாட்களுக்கு பிறகு அனைத்துப் பொருட்களுடனும் சூட்கேஸ் திரும்பக் கிடைத்தது. இனிய அன்னையின் மலர்ப் பாதங்களுக்கு மனமார்ந்த நன்றி.

இமைப்பொழுதும் எங்களை விட்டு அகலாது வாழ்வின் ஒவ்வொரு நொடிப்பொழுதும் அருள் வழங்கி அரவணைத்துக் காத்து நிற்கும் பகவான் ஸ்ரீ அரவிந்தர், மஹாகாளி அன்னை இவர்களின் பாதாரவிந்தங்களில் எங்கள் வாழ்வைச் சமர்ப்பணம் செய்து, அவர்கள் விரும்பும் வகையில் எங்களை வழி நடத்திட அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்.

சரணம் சரணம் சரணம் அம்மா.

✻ ✻ ✻





## P. 14. சக்தியின் பின் உறுதி will உண்டு எனில் அது யாருடைய உறுதி அது மனிதனுடைய உறுதி அன்று, கடவுளுடைய உறுதியாகும்.

ஒருவர் வீடு கட்டினால் அது அவர் பணம் என அறிகிறோம். 20,000 ரூபாய் சம்பளமுள்ளவர் குடும்பத்துடன் உலகைச் சுற்றிவரப் புறப்பட்டால் அது அவர் பணமாக இருக்க முடியாது, கம்பெனிப் பணமாக இருக்கலாம் எனக் கருதுகிறோம். நம்மூரில் பெரிய பாலம் கட்டினால், ஏது பணம் என எவரும் கேட்பதில்லை. ஆனால் இதெல்லாம் வரிப்பணம் என நினைப்பவருக்கு நம்மூர் வரிப் பணத்தில் இதெல்லாம் கட்ட முடியாது எனப் புரியும். வரிப்பணம் என்பது உண்மைதான். ஏக்கருக்கு 60ரூபாய் வாய்தா கட்டினால் நம்மூரில் உள்ள 1000 ஏக்கரிலும் 60,000 தான் வரும். பாலம் கட்ட பல கோடி வேண்டும். எனவே இப்பணம்,

**ஓர் ஊர் பணம் இல்லை, இது சர்க்கார் பணம்**

எனப் புரிகிறது.

சக்தியை will உறுதி செய்கிறது. சக்தி உலகத்தை சிருஷ்டித்தது என்றால், தனி மனித உறுதியோ, மனித குலத்தின் உறுதியோ சூரிய மண்டலத்தையும், உலகத்தையும் சிருஷ்டிக்க முடியாது. இதற்குரிய உறுதி அதைவிடப் பெரியது.

**அது ஆண்டவனின் will உறுதியாகும்**

என விளங்கும்.

சக்தி பலனாக மாற உறுதி வேண்டும் என்பது சட்டம்.

தமிழ்நாட்டில் பணக்காரர்கள் எல்லா ஊர்களிலும் உண்டு. பொதுவாகப் பணக்காரன் என்றால் தியேட்டர், பஸ், ஹோட்டல்

முதலாளியாக இருப்பான். கடந்த 10 வருஷமாக நிலைமை மாறுகிறது. சிறு தொழில்கள் எல்லா ஊர்களிலும் ஏற்படுகின்றன. அவற்றுள் 60%, 70%க்கு மூடி விடுகின்றனர். ஏன்?

தொழிலை ஆரம்பிக்கும் திறனிருந்தாலும், நடத்திப் பலன் பெறத் தேவையான திறமை - will power - இல்லை.

உள்ளூரில் கல்லூரி இருந்தாலும், படிக்க வசதியும், புத்திசாலித்தனமிருந்தாலும் படிப்பைத் தொடர்ந்து முடிக்கும் திறன் அனைவருக்கும் இல்லை.

1875இல் அமெரிக்காவில் Ph.D., பட்டம் பெற்றவர் ஒருவரே. இன்று ஆண்டுக்கு 36,000 பேர் அதைப் பெறுகின்றனர். பணமிருக்கலாம், வசதியிருக்கலாம், காரியத்தை முடிக்கும் திறனில்லாவிட்டால் 36,000 பட்டம், 1 பட்டத்துடன் நின்றுவிடும்.

உலகம் சிருஷ்டிக்கப்பட்டு இயங்குகிறது. நதிகளும், மலைகளும், சர்க்காரும், கோடிக்கணக்கான மனிதர்களும், நகரங்களும், உள்ளன எனில்,

- இவை ஒரு மனிதனால் செய்யப்பட்டதில்லை.
- மனித குலம் முழுவதும் சேர்ந்து சூரிய மண்டலத்தை ஏற்படுத்த முடியாது.
- இதை சிருஷ்டித்தது ஆண்டவன் என முடிவு செய்கிறோம்.

❊ ❊ ❊

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

ஓடும் எண்ணம் ஒன்று போதும் அருளை விலக்க. மனதில் ஆயிரம் எண்ணமிருந்தால், திகைத்து நிற்பதே அருளைப் பெறும் வழி.

*எண்ணத்தால் நிறையும் மனம் திகைத்து அருளைப் பெறும்.*



**Agenda**

***தீமையைக் குணப்படுத்துவது***

- ★ தீமையால் பாதிக்கப்படாதபடி நகர்ந்து உயர எட்டி நிற்பது முதற் கட்டம்.
- ★ இறைவனின் நன்மை இத்தீமையால் திரையாக மறைக்கப்படுவதைக் காண்பது அடுத்தது.
- ★ தீமை உன்னைத் தொடாது. அது உன்னிடம் இல்லை என்பதால் தொட முடியாது. அதைப் பற்றிப் பேசினால் தீமை வளரும்.

இவை போன்ற கருத்துகளை நாம் சரித்திர நிகழ்ச்சிகள் மூலமாக, தத்துவார்த்தமாக அறியலாம். அருகிலுள்ள நிகழ்ச்சிகளை இப்படி ஏற்க மனம் ஒத்துக் கொள்ளாது. சொந்த வாழ்வை இக்கருத்து தொடவும் மனம் சம்மதிக்காது.

**எந்த அளவில் மனம் இடம் தருமோ அந்த அளவில் இக்கருத்தை மனத்தாலும், உணர்வாலும் ஏற்பது அன்னையை ஏற்பதாகும்.**

- ★ நாணயமான மனிதனை ஒருவன் திருடன், ஊழல் எனப் பலரிடமும் பேசுவது நாணயஸ்தன் காதிற்கு வந்தவுடன் மனம் கொந்தளிக்கும், அப்படிப் பேசியவனிடம் நேரில் போய் சண்டை போடத் தோன்றும், எதிரிலுள்ளவரிடம் அவனைத் திட்டித் தீர்த்துவிடுவார். அவற்றையெல்லாம் செய்யாமலிருக்க வேண்டும் என்று தோன்றாது. யாராவது சொன்னால் கோபம் அதிகமாக வரும்.
- ★ அதற்கு மாறாக, நாணயஸ்தன் இது தீமை, இதனிடம் நான் மாட்டிக் கொள்ளக் கூடாது, நகர்ந்து போக வேண்டும், உயர்ந்து நிற்க வேண்டும் என்று நினைக்க முடிவது சிரமம்.

அதை அவர் செய்தால் கடல்போன்ற அமைதி நெஞ்சில் கனப்பது தெரியும். அது இறைவனின் ஸ்பர்சம். நமக்கு இறைவனின் ஸ்பர்சம் இதமாக இருந்தாலும் அது கண்ணில் படாது, கருத்தையும் தொடாது. வாழ்க்கை நிகழ்ச்சிகள் புரியும்.

- அமைதியான மனத்துடன் வீட்டிற்குப் போனால் “நீங்கள் இத்தொகுதிக்கு M.Pயாக நிற்க வேண்டும்” எனப் பலர் வந்து காத்திருப்பார்கள்.
- **இந்த நல்ல செய்தி இறைவனின் ஸ்பர்சத்தின் ஒரு துளி என்பதும், ஸ்பர்சத்தை நாம் கவனிக்கவில்லை என்பதும்**, இதைத்தான் அவதூறு திரையாக மறைத்தது என்பதும் நாமறியாதவை.
- வாழ்க்கைப் பரிசை ஏற்பதும், அது ஸ்பர்சத்தின் பகுதி என்பதும், அவதூறு பரிசின் “பவித்திரமான” பார்வை என்பதையும் காண்பது அன்னையை நெருங்கும் ஞானம்.

❊ ❊ ❊

### ஸ்ரீ அரவிந்த சுடர்

உன்னுடைய சந்தோஷம், மரியாதை, பாதுகாப்பு ஆகியவற்றிற்கு உரியவர்களே உன் உலகத்தைச் சேர்ந்தவர்கள். மேலும் சொல்லப் போனால், இது போன்ற ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒருவரே முக்கியமாக இருப்பார்கள். அந்த நான்கு, ஐந்து பேரே “என் உலகம்” என நீ பேசுவதாகும்.

*உலகம் சுருங்கி ஒருவராவதும் உண்டு.*



## வாழ்க்கையின் முக்கியமான இடங்களைப் பற்றி அன்னை அன்பர்கள் அறிய வேண்டிய கருத்துகள்

*(4.11.2001 அன்று கடலூர் தியான மையத்தின் ஏழாமாண்டு தொடக்க விழாவில் திரு. P.V. சங்கர் நிகழ்த்திய உரை.)*

இதுவரை அன்பர்கள் கேள்விப்பட்டவை பல. கேள்விப்பட்டவற்றுள் பல வாழ்வில் நடந்துள்ளன. சில அனுபவத்தில் பார்க்க முடியவில்லை. சமீபக் காலத்தில் சென்னையிலிருந்து ஒருவர் தம் உறவினர் வீட்டு விசேஷத்திற்காகப் பாண்டிக்கு வந்திருந்தார். குழந்தைக்குப் பிறந்த நாள் கொண்டாடினர். அக்குழந்தையை அழைத்துக் கொண்டு கடைத் தெருவுக்குப் போனபொழுது 3 பவுன் நகையை குழந்தை தொலைத்து விட்டதைக் கண்டு தேடி அலுத்துவிட்டுத் திரும்பினர். அவருக்குப் பாண்டி புதிய இடம். தாம் வந்தபொழுது அண்ணன் வீட்டில் தவறு நடந்தது அவருக்குத் தாங்கவில்லை. மனம் பதறியது. பல யோசனைகள் தோன்றின. திடீரென இந்த ஊரில் அன்னை என்பவர் உண்டு என்கிறார்களே அவர்களாவது காப்பாற்றமாட்டார்களா என மனம் ஏங்கி, பிரார்த்தனை செய்து தூங்கிவிட்டார்.

கனவு, வயதான பெண்மணி இவரை எழுப்பி கனவில் கடைத் தெருவுக்கு அழைத்துப் போகிறார். அங்கு ஒரு ஹோட்டலில் போர்ட் உள்ளது. எதிரில் ஒரு கூல்டிரிங் பார் இருக்கிறது. அவர் அதனருகில் சென்று ஒரு சிறு குப்பை மேட்டைக் காட்டி அதைச் கிளரச் சொல்கிறார். தொலைந்த நகை அதனுள் இருக்கிறது. கனவு கலைந்து எழுந்தார். இது கனவல்லவா எனத் தூங்கினார். காலையில் எழுந்தவுடன் கனவில் கண்டது கண்முன் நின்றது. அண்ணனை அழைத்துக் கொண்டு கடைவீதிக்குப் போனார். ஹோட்டலைக் கண்டார். கூல்டிரிங்ஸ் பார் இருந்தது. அதனருகில் குப்பை மேடும் இருந்தது. கிளறிப் பார்த்தார். நகை இருந்தது!

- ★ பிரார்த்தனை பலித்தது, தொலைந்த பொருள் கிடைத்தது, மிக சந்தோஷம்.
- ★ இங்கு அது மிகச் சிறு விஷயம். பெரிய விஷயம் அருள் செயல்பட்டது.
- ★ நாம் நகையை அறிவோம். அருளை அறிய முடிவதில்லை.
- ★ அருள் கண்ணுக்குத் தெரிவதில்லை.
- ★ விசேஷம் என்ன?
- ★ மனித இதயம் கசங்கியபொழுது தெய்வ அருள் குரல் கொடுக்கிறது.
- ★ இக்கருத்தை இந்த அன்பர் பெற முடியுமானால், மனம் அன்று போல் என்றும் இருக்க முடியுமானால், இவர் வாழ்வில் அனுதினமும் அருள் செயல்படும்.
- ★ தொடர்ந்து அருள் செயல்படும் வாழ்வு உயர்ந்தது, அன்னைக்குரியது.
- ★ இதை அவ்வன்பர் ஏற்றுக் கொள்வாரா?
- ★ நமக்கு இக்கருத்து ஏற்குமா?
- ★ அதன் குறைந்தபட்சம் வாழ்வில் அதிர்ஷ்டம் ஏற்பட்டு நிலைத்துவிடும்.
- ★ அருளின் இந்த அம்சம் நாம் அறியக் கூடியது. பொதுவாக நாம் அறிவதில்லை.
- ★ இதுவே கருவான இடம்.
- ★ ***பலித்தது பிரார்த்தனையன்று, பலித்தது அன்னை.***

நமக்கு வாழ்வில் முக்கியமான கட்டங்கள்,

1. வேலை
2. வருமானம்
3. செலவு



4. படிப்பு
5. உடல் நலம்
6. திருமணம்
7. உறவு, நட்பு (human relations)
8. குழந்தை வளர்ப்பு
9. அரசியல்
10. மதவழிபாடு, ஆன்மீகம்.

வாழ்வில் பல பெரிய உண்மைகள் நமக்குத் தெரிந்தும், நடைமுறையில் தெரியாமல் போகின்றன.

- ★ ஓட்டுரிமை என்பது வாக்குரிமை மட்டும் அன்று. நாமே வேட்பாளராகும் உரிமை.
- ★ ஒரு பொருளை - பிளாஸ்க், வேஷ்டி, பூச்செண்டு - நாம் கடையிலிருந்து வாங்கினால், பயன்படுத்துகிறோம். அத்துடன் நம் கற்பனை நிற்கிறது. இப்பொருளை விற்க, வினியோகம் செய்ய, உற்பத்தி செய்ய நமக்குள்ள உரிமையை நாம் அறிந்தாலும், மனதில் அது படுவதில்லை.
- ★ நாம் காண்பது குறைவு, கண்ணுக்குப் பின்னாலிருப்பது கடல் போன்றது.

பிரார்த்தனையை நாம் நம் தேவை என அறிகிறோம். அதில் மேலும் அறிய வேண்டியது உண்டு. வேலையைத் தேடும் நேரம்,

- ★ எல்லாத் தகுதிகளுமிருந்தும், நாட்டில் ஏராளமாக வேலை வாய்ப்பிருந்தும், ரூ. 18,000 சம்பளம் பெறும் தகுதியுள்ளவர்க்கு 8000ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைக்கிறது. 18,000ரூபாய் வேலைக்குப் பலமுறை முயன்றாலும் 10 பேர் எடுக்கும் இடத்தில் 28 பேர், 42 பேர் வருகிறார்கள். நமக்குக் கிடைக்காமற் போகிறது.

★ தகுதியுள்ளவர்க்கே வேலை கிடைக்காத நேரம், தகுதியில்லாத நாம் அவ்வேலைக்கு ஆசைப்படுகிறோம்.

★ நம்போல் பட்டம் உள்ளவர் கிடைக்கவில்லை என்பதால், இந்தப் பட்டத்தில் சேர்ந்து, பட்டத்துடன் வந்தபொழுது நிலைமை மாறி, வேலை கிடைப்பதில்லை.

★ தகுதியிருந்து அனுபவமில்லாததால் கிடைப்பதில்லை.

★ பெற்றோர் உள்ளூரிலேயே வேலை வேண்டும் என்பதால் வேலையில்லை.

★ எத்தனையோ தகுதிகள் அபரிமிதமாக இருந்தும் உயர்ந்த ஜாதியால் கிடைப்பதில்லை.

★ தகுதியுண்டு. நேர்முகத் தேர்வில் வாய் தெற்றுவதால் வேலை கிடைப்பதில்லை.

★ தகுதியில்லை, திறமையில்லை, சந்தர்ப்பம் சரியில்லை, ஆனால் வேலை மீது ஆர்வம் உண்டு.

பிரார்த்தனையைப் பற்றிப் பேசுமுன், வேலை தேடுபவருக்கு இருக்க வேண்டிய தகுதிகளைப் பற்றிப் பேசுவோம். அவற்றை இரு பாகங்களாகப் பிரிப்போம். ஒன்று புறத்தகுதிகள், அடுத்தது அகத்திற்குரிய பக்குவங்கள்.

| புறம் | அகம் |
|---|---|
| 1. வயது, நல்ல உடல் நலம் | 1. சுறுசுறுப்பான சுபாவம் |
| 2. வேலைக்குரிய படிப்பு, பயிற்சி | 2. வேலையில் ஆர்வமுள்ள சுபாவம் |
| 3. அனுபவம் | 3. வேலையில் அனுபவத்தால் பயன்பெறும் பாங்கு |
| 4. குடும்பப் பொறுப்பு | 4. வேலை எங்குக் கிடைத்தாலும் போகும் மனநிலை |
| 5. குடும்பத்தின் நல்லெண்ணம் | 5. குடும்பத்திற்கு உதவும் பொறுப்புணர்ச்சி |
| 6. தகுதியின் சிறப்புகள் | 6. தகுதியைப் பெறும் முயற்சி ஆர்வம் |

IAS வேலையானாலும், கம்பனி மேனேஜர் வேலையானாலும், நாட்டில் - நமது வட்டாரத்தில் - அதுபோல் 70 வேலைகள் காலியானால்



மேற்சொன்ன தகுதிகள் உள்ளவர் 700 பேர் வேலைக்குக் காத்துள்ளனர். வேலை உயர்ந்ததானால் 7000 பேரும், 70,000 பேரும் போட்டியிடுவர். தகுதிகள் குறைவற அன்பருக்கிருந்தால், போட்டியைப் புறக்கணித்து அன்பர் பிரார்த்தனையால் தேர்ந்தெடுக்கப்படுவார். அப்படி வேலை கிடைத்ததற்கு அருள் விளக்கமுண்டு. இதுவரை இந்த வேலையில் இலாக்காவின் தலைமையை எட்ட 25, அல்லது 30 ஆண்டுகளாகும். ஆனாலும் அங்கும் ஒரு பதவிக்கு பலர் காத்திருப்பார் என்பதே உண்மையானால், அன்பருக்கு வேலை கிடைத்ததின் அருள் விளக்கம்: வேலையில் முழுத் தகுதியிருந்தால் அது முன்னரே கிடைக்கும். 15 ஆண்டிலும் கிடைக்கும், அதற்கு முன்னும் கிடைக்கும், அருள் சட்டத்திற்குக் கட்டுப்படாது.

இருக்க வேண்டிய தகுதிகளில் ஒன்று குறைவாக இருந்தால், அதை நிறைவு செய்யும்படியான முயற்சியை வேறொரு முறையில் செய்ய வேண்டும். அனுபவமில்லை எனில் நேர்முகத் தேர்வில் சிறப்பாகப் பதில் கூற வேண்டும். பெற்றோர் உள்ளூரிலேயே வேலை வேண்டும் என அர்த்தமற்று ஆசைப்பட்டால், அவர்கள் மனம் மாறுவது முறை. அவர்கள் வேலையைப் பெற அக்குறையை ஏற்படுத்தினால் அன்னை நெஞ்சை விட்டு அகலாதவண்ணம் அக்குறையை நினைவால் பூர்த்தி செய்தால், அக்குறையை மீறி வேலை கிடைக்கும்.

குறை என்பது இருந்தால், அதை முறையாக நிறைவு செய்வது சரி. சில சமயங்களில் அது முடியாது. பிறந்த ஜாதியை மாற்ற முடியாது. நம் படிப்பு உயர்ந்ததானாலும், நாம் படித்த கல்லூரிக்குக் கெட்ட பெயரிருந்தால், அதை எப்படி மாற்றுவது? உயர்ந்த ஜாதிக்குரிய உயர்ந்த தருணங்களை நாம் மேற்கொண்டால், தடை விலகும். கல்லூரிக்குக் கெட்ட பெயரிருந்தால் நாம் அக்கல்லூரியை பெருமையாகக் கருதாவிட்டால், அது நம்மைப் பாதிக்காது.

★ தகுதியிருந்தால் பலிக்கும்.

★ தகுதியின் குறைவை நிறைவு செய்தால் பலிக்கும்.

★ பக்தி பூரணமானால், எந்தக் குறையை மீறியும் பலித்ததுண்டு.

★ எதுவுமேயில்லாமல், அருள் பலித்ததுண்டு.

வருமானம் எப்படி வருகிறது? அன்னையை அறிவதால் அது எப்படி மாறும்? அன்னை என்பது சக்தி. சக்தியுள்ளே வருவதால் எதுவும் வளரும், பெருகும். மரங்களுக்கு எரு விடும் பழக்கமோ, நீர் பாய்ச்சும் பழக்கமோ இல்லை. சில சமயங்களில் பயிரிடும் நிலத்தின் எல்லையில் மரங்களிருப்பதுண்டு. கிணற்றங்கரையில் மரம் நடுவதுண்டு. மரத்திற்கு என எருவும் நீரும் பாய்ச்சாவிட்டாலும், பயிருக்கு இடும் எருவை மரம் பெற்றுக் கொள்கிறது. நீரையும் பெறுகிறது. அம்மரம் அதிக வளமாக இருக்கிறது. அதிகமாகக் காய்க்கிறது. மரமானாலும், மனிதனானாலும், சவரட்சணை, போஷாக்கு, தீவனம், பெற்றால் யாரும் வளருவர். அது போன்றது அன்னை அருள் சக்தி. அது எதனுள் நுழைந்தாலும் அது வளரும். அன்னை சம்பந்தமான ஸ்தாபனங்களுடன் கடைகள், சர்வீஸ் ஸ்தாபனங்கள் வேலை விஷயமாகத் தொடர்பு கொள்கின்றன. இவை, இவை போன்ற மற்ற ஸ்தாபனங்களை விட செழிப்பாக இருப்பதைக் காணலாம்.

அன்பர்கள் பல்வேறு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். மளிகைக்கடை, ஷாப், டெய்லர், லாண்டரி, பெட்டிக்கடை, எலக்ட்ரீஷியன், புத்தகக்கடை, லைப்ரரி, ஐஸ்கிரீம் ஸ்டால், தினசரிப் பத்திரிகை, காஸ் கம்பெனி, பெயிண்ட் கடை என 50 வகைகளில் நாம் மார்க்கெட்டில் தொடர்பு கொள்கிறோம். அவர்கட்கு அன்னையைத் தெரியாது. இவர்களை எல்லாம், நம் தொடர்புக்கு முன்பிருந்த நிலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இதரக் கடைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அன்னையின் அருளும், சக்தியும், சூட்சமாக இவர்கள் வாழ்வில் செயல்பட்டிருப்பதைக் காணலாம்.

**வருமானம் இதற்கு விலக்கன்று.**



அன்னையருள் பட்டவுடன் வருமானம் வளரும். அதற்கு மேற்பட்ட உண்மையை வேலையைப் பற்றிக் கூறியதுபோல் கவனித்தால், வருமானம் அதற்குரிய முறையோடு இருந்தால், அளவுகடந்து பெருகும். அதற்குரிய முறை என்ன?

1. வருமானம் வரும் துறை முறையான துறையாக இருக்க வேண்டும்.
2. நமக்கு வரும் வருமானத்திற்கு நாம் பிரதிபலனாகத் தரும் உழைப்பு அல்லது பொருள் சிறப்பாகவும், போதுமான அளவுள்ளதாகவுமிருக்க வேண்டும்.
3. பொதுவாக சுத்தம், பேச்சு, கணக்கு, ரிக்கார்ட் போன்றவை சரிவர இருப்பது அவசியம்.

அன்னை சக்தி வருமானத்தைப் பெருக்கும், முறையான வருமானத்தை அதிகமாகப் பெருக்கும். அரிசி கடையும், சைக்கிளும் கையுமாக இருந்தவர் 72இல் அன்னையை அறிந்தார். 76இல் அவர் 20 லட்சம் சம்பாதித்ததாகக் கூறினார். உழைப்பாளிக்கு வருமானம் அபரிமிதமாகப் பெருகும்.

> **செலவு முறையானால், செய்யும் செலவைவிட வருமானம் பெருகும் என்பது அன்பர்களுடைய நீண்ட நாளைய, தொடர்ந்த அனுபவம். “வரு மானம் பெருக வேண்டுமானால், செலவு செய்ய வேண்டும்” என்று சொல்லத் தோன்றுகின்றது என்றார் ஓர் அன்பர்.**

**உடல் நலம் :** நாடித் துடிப்பு 72, டெம்பரேச்சர் 98.6°, சர்க்கரை 110, B.P. 90/110, எடை உயரத்திற்குத் தகுந்தாற்போலிருக்க வேண்டும் என்பதை இன்று பலரும் அறிவர். டெம்பரேச்சர் 1° உயர்ந்தாலும் அது காய்ச்சல், 72 முறை அடிக்க வேண்டிய இதயம் 82 முறை அடிப்பது என்றால் படபடப்பு வந்துவிடும். டாக்டரிடம் போனவுடன் அவர் வியாதிக்கேற்ப பல டெஸ்ட் செய்து நம் உடலை

நிதானமாக்க முயல்கிறார். உடலில் உள்ள ஒவ்வொரு பகுதியின் செயலுக்கும், இருக்க வேண்டிய அளவை நிர்ணயித்துள்ளனர்.

- ★ இவை எல்லாம் சரி.
- ★ இவற்றிற்கு மேற்பட்ட உண்மையும் உண்டு.
- ★ அது நிதானம் (inner balance).
- ★ அந்த நிதானமிருந்தால் 5 அடி உயரமுள்ள பெண் 270 பவுண்டு எடையுடன் 87 வயது வாழ்வதும் உண்மையாக இருக்கும். இதுவும் அன்னை வாழ்வில் நடந்ததேயாகும்.
- ★ அதையும் கடந்த உண்மையும் உண்டு.

**எந்தச் சட்டம் மாறினாலும் அருள் செயல் படுவதால் நிதானம் ஏற்பட்டு சட்டத்தைப் புறக்கணித்து உடல் நலம் பெறும் என்பது உண்மையானாலும் சட்டத்தை அவசியமாகப் பின்பற்ற வேண்டும்.**

- ★ அன்னையின் ஆன்மீக அருள் தரும் நிதானத்தின் முழுப் பலன் பெற நாம் மருத்துவத் துறைக்குரிய (norms) சட்டத்தை மயிரிழை வழுவாமல் பின்பற்றுதல் அன்னைக்குகந்தது.
- ★ இந்த நிதானமிருப்பதற்கு அடையாளம் சந்தோஷம்.
- ★ சந்தோஷம் தானே உள்ளிருந்து எழுந்து வருமானால், மருத்துவத் துறையின் சட்டங்களைக் கடந்த ஆரோக்கியம் மனிதனுக்குண்டு.

சுமார் 10 வகையான வாழ்க்கை அம்சங்களை நாம் முதலில் குறிப்பிட்டோம். கடைசியாக வழிபாடு, ஆன்மீகத்தையும் கூறினோம். ஒரு குடும்பத்தில் ரூ. 10,000 வருமானம் வரும்பொழுது, அதனால் 7பேர் பயன் பெற வேண்டுமானால், பொறுப்பாக, கருத்தாக பணத்தைச் செலவு செய்தால், எவருக்கும் பணத்தட்டுப்பாடிருக்காது. குடும்ப வருமானம் 50,000ரூபாய் எனில் 7 பேர் சௌகரியமாக



வாழ மாதம் ரூ. 10,000த்திற்கு மேல் தேவையில்லை எனில் அத்தொகையை மட்டும் செலவு செய்யும் நிதானமுள்ள குடும்பத்தில் 50,000ரூபாய் தானே உபரியாகும். பெருகிக் கொண்டேயிருக்கும். செலவு குறைவா, அதிகமா என்பதைவிட செலவு சரியா, இல்லையா என்பதே முக்கியம்.

- ★ முக்கியமான செலவு அதிகமானாலும், வருமானம் பெருகும்.
- ★ முக்கியமில்லாத செலவு சிறிதளவு மிகைப்பட்டாலும் வருமானம் சுருங்கும்.
- ★ அன்னை என்பது நம் நிலைக்கு 8 நிலை உயர்ந்துள்ள ஆன்மீக சக்தியான அருள்.
- ★ அன்னையை சக்தி எனக் கூறுவதைவிட ஒரு ஸ்தாபனம் எனக் கூறுவது பொருந்தும்.
- ★ அன்னை சூட்சும ஸ்தாபனம், உலகெங்கும், பிரபஞ்சமெங்கும் பரவியுள்ள ஸ்தாபனம்.
- ★ உலகின் உரிமை, வசதிகளை, நாம் தேடிப் போக வேண்டும்.
- ★ அருளின் சௌகரியம் அன்னை மூலம் நம்மை நாடி வருகிறது.
- ★ எந்த நேரமும் இந்த சக்தி தவறாமல் செயல்பட்டு பலன்தர, நாம் செய்ய வேண்டியவை இரண்டு.

  1. அதை அழைக்க வேண்டும்.
  2. நாம் பாஸிட்டிவாக இருக்க வேண்டும்.

- ★ நம் நிலை எதுவானாலும், சக்தி சாதகமாகச் செயல்படும் என்றாலும், நாம் பாஸிட்டிவாகவும், முறையாகவுமிருப்பது அவசியம்.
- ★ மதவழிபாடு வெட்டிவிட்ட வாய்க்கால், ஆன்மீகம் பரந்து விரியும் கடல் போன்றது.
- ★ அரசியல் மிக விரைவாக உயரும் வாய்ப்புள்ள துறையாதலால்,

அங்கு அன்னை செயல்படுவதை எளிதில் காணலாம்.

- ★ திருமணத்தில் அருளின் இன்மை வெளிப்படும்.
- ★ செலவில் அன்னை வழக்குக்கு எதிராகச் செயல்படுவது எளிதில் தெரியும்.
- ★ படிப்பில் பாஸ் செய்ய முடியாதவன், முதல் மார்க்கு வாங்குவதைக் காணலாம்.
- ★ உடல் நலம் எந்த ஆதரவுமின்றி, எல்லா போஷாக்குகளும் இருப்பதைப்போல் வளர்வதை உடல்நலத்தின் விஷயத்தில் காணலாம்.
- ★ 95 வயதான சாதகருக்கு இதயத் துடிப்பு அடிக்கடி தவறுகிறது, லிவர் சரியில்லை, பொதுவாக எந்த உறுப்பும் இருக்க வேண்டியது போலில்லை ஆனால் இவர் எப்படி உயிருடன் இந்த நிலையில் மாதக்கணக்காக இருக்கிறார் என டாக்டர்கட்குப் புரியாத விதம் உடல் நலம் பெறுவது அருளின் சிறப்பு.
- ★ அன்னையை இரு தம்பதிகளும் ஏற்றுக் கொண்டால் அடுத்தவர் திருமணமான 10 ஆண்டுக்குப் பின் அவர்கள் நெருக்கத்தைக் கண்டு ஆச்சரியமும், பொறாமையும் படும்படி வாழ்வு அமையும்.

  - ▪ எதுவுமேயில்லாவிட்டாலும், எல்லா அம்சங்களும் இல்லாவிட்டாலும், எல்லாம் இருப்பதைப்போல் எந்தக் காரியமும் அருளால் நடைபெறும் என்பது உண்மை ஆனாலும், எந்தச் சட்டமும், நிபந்தனையும் இழை தவறாமல் பூர்த்தி செய்யப்பட்டு, இடைவிடாமல் நாம் அன்னை நினைவில் வாழ்வது அன்பருக்குள்ள கடமை.

❊ ❊ ❊





# பரிணமிக்கின்ற ஒரு ஜீவனின் வாழ்க்கையில் நடக்கின்ற ஒரு நாள் நிகழ்ச்சிகள்

(ஆங்கிலக் கதை Mr. Roy Posner என்ற அமெரிக்கரால் எழுதப்பட்டது. தமிழாக்கம் N. அசோகன்.)

(Growth Online என்ற இணையதளத்தில் பர்சனாலிட்டி வளர்ச்சி என்பது பற்றி கூறப்பட்டுள்ள கருத்துகளை விளக்கும் வகையில் ஒரு கற்பனையான கதாபாத்திரத்தின் வாழ்க்கையில் ஒரு நாளில் நடக்கின்ற நிகழ்ச்சிகளைப் பார்ப்போம்.)

சென்னை மாநகரத்தில் அடையாற்றில் குடியிருந்த சாந்தி என்ற இளம் பெண் ஒரு நாள் காலை தூக்கம் கலைந்து படுக்கையிலிருந்து எழுந்தபொழுது திடீரென்று அன்றைக்கு வழக்கத்தைவிட அதிகமாக உடம்பில் தெம்பு இருப்பது தெரிந்தது. பொதுவாக ஒரு கப் காப்பி குடித்தால்தான் அவளுக்குக் காலை சோம்பலிலிருந்து விடுபட முடியும்.

இந்த எனர்ஜியை அவளுக்கு வழங்கியது எது? அவளுடைய வேலையைச் செய்வதால் அவளுக்கொரு எனர்ஜி கிடைத்திருப்பது அவளுக்குத் தெரியும். ஒரு சில மாதங்களுக்கு முன்னால்தான் தனக்கேற்ற வேலையைச் சிரமப்பட்டுத் தேடிக் கொண்டிருந்தாள். அச்சமயம் மூன்று மாதத்திற்குள் தன்னுடைய கரியரில் (career) அடுத்த கட்டத்திற்கு உயர்வதென்று தீர்மானித்து இருந்தாள். அப்படி முன்னேறுவதற்கான வழிமுறைகள் உண்டு என்றொரு கருத்தை கேள்விப்பட்டிருந்தாள். அவ்வழி முறைகளைக் கடைப்பிடித்து தன் பணிநிலையை உயர்த்துவதென்று தீர்மானித்தாள்.

முதற்படியாக மேனேஜ்மெண்ட் துறையில் பல புதிய திறமைகளை வளர்த்துக் கொண்டாள். அப்படிக் கற்றுக்

கொண்டவைகளில் project management skills and software skills இரண்டும் அடங்கும். அதன் பிறகு இத்துறையில் தனக்கேற்ற பதவியை அடைந்தே தீர்வதென்று தீர்மானித்து, அதற்கேற்றபடி தீவிரமாக வேலை தேடுவதில் இருந்த தயக்கத்தை விடுவதென்று மனதிற்குள் முடிவு செய்த பிறகு, தனக்கெல்லாம் சரியாக நடப்பதைக் கண்டாள். இதனால் அவளுடைய பணியில் அவளுக்கொரு பெரிய முன்னேற்றம் ஏற்பட்டது. அப்பட்சத்தில் அன்று காலை அவளுடைய எனர்ஜி லெவல் அதிகமாக இருந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இதுபோக உண்ணும் உணவில் மாவு சத்தைக் (carbohydrate) குறைத்து அதன் விளைவாக 20 பவுண்டு தன்னுடைய எடையையும் குறைத்திருந்தாள். மேலும் தன்னுடைய துணிமணிகளை அதிகரித்துமிருந்தாள். இவை எல்லாம் சாந்தி தன்னைத் தயார் நிலையில் வைத்திருந்தாள் என்பதைக் காட்டுகின்றன.

சாந்தி குளித்துவிட்டு, தான் புதிதாக வாங்கிய துணிமணிகளில் ஒன்றை எடுத்து அணிந்து கொண்டு வேலைக்குப் புறப்பட்டாள். Integral Net என்ற தன்னுடைய அலுவலகத்திற்கு அன்று வந்திறங்கியபொழுது ஹாலில் தூரத்தில் தன்னுடைய சக பணியாளர் லலிதாவைக் கண்டு கையாட்டினாள். முதலில் அந்த வேலைக்கு வந்திருந்தபொழுது இந்த லலிதாவுடன் சேர்ந்து பணியாற்றுவதில் தனக்கொரு டென்ஷன் வருவதை உணர்ந்திருந்தாள். அதாவது லலிதாவைப் பற்றிய ஏதோவொன்று சாந்தியை சங்கடப்படுத்தியது.

ஆனால் அதிர்ஷ்டவசமாக இம்மாதிரியான எரிச்சலிலிருந்து விடுபட்டால் நல்ல பலன் கிடைக்குமென்றவொரு கருத்தைத் தான் கேள்விப்பட்டது அவளுக்கு நினைவிற்கு வந்தது. உண்மையில் சென்ற மாதம் ஒரு நாள் லலிதா மேல் தனக்கு எரிச்சல் வந்ததும், அதைத் தான் கட்டுப்படுத்தி பிறகு ஓரளவிற்கு நல்லெண்ணமாக மாற்றியதும் நினைவிற்கு வந்தது. (**மேலும் அதைப் பற்றிச் சிந்தித்து பார்த்தபொழுது, நல்லெண்ணத்தை கொண்டு வந்த அன்றே**



**அவளுடைய மேலதிகாரி அவளை அழைத்து அக்கம்பெனியின் மிகப் பெரிய project-ற்கு அவளை project மேனேஜராக நியமிப்பதாகச் சொன்னதும் ஞாபகத்திற்கு வந்தது**). அதன் விளைவாக அவளுக்குப் பதவி உயர்வு கிடைத்தது. சம்பளமும் உயர்ந்தது. அச்சமயம் தன் மனோபாவம் மாறியதற்கும் புதிய வாய்ப்பு வந்ததற்கும் தொடர்பிருக்கிறது என்று ஏற்றுக் கொள்வது சிரமமாகவிருந்தது.

ஆனால் இப்பொழுது மனோபாவத்தை மாற்றுவதும் அதற்குண்டான Life response விளைவுகளைப் பார்ப்பதும் சாந்திக்குப் பழக்கமாகிவிட்டது. தான் வேலை செய்யும் அலுவலகத்தில் தன் வேலை சம்பந்தமான நிகழ்ச்சிகளில் இத்தொடர்பைச் சில தடவைகள் பார்த்திருக்கிறாள். ஒவ்வொரு தடவையும் தன்னுடைய எரிச்சலை வென்றபொழுது நல்லது நடந்ததையும், அந்நிகழ்ச்சிகள் அதிசயம்போல நிகழ்ந்ததையும் கவனித்திருக்கிறாள்.

இப்பொழுது தவறான மனோபாவத்தை முறியடிப்பதை விவரமாக கடைப்பிடிக்க முடிவு செய்ததை நினைவு கூர்ந்தாள். இனி எரிச்சல் தலையெடுக்கும்பொழுதெல்லாம் அடுத்தவருடைய குறையைப் பற்றி நினைக்காமல், இவ்விஷயத்தில் தன்னுடைய குறையென்ன என்று சிந்திப்பது என்று முடிவு செய்திருந்தாள். இத்தகைய முடிவு, புதிய சூழ்நிலைகளை நல்லவிதமாக சமாளிக்க அவளுக்கு உதவியாக இருந்தது.

(**மேலும் இத்தகைய முடிவெடுத்தபின் தன்னுடைய மனநிலையில் அமைதி அதிகரித்திருப்பதையும் உணர்ந்தாள்**). உதாரணமாக குமார் என்ற சக பணியாளர் ஒரு நாள் அவளைத் தேடி வந்து அளவிற்கு அதிகமாகப் பேசிக் கொண்டிருந்தபொழுது, எரிச்சல்படாமல் வேலையைத் தொடர்ந்து அவளால் செய்ய முடிந்தது. உண்மையில் தன் மனநிலையை அன்று மிகவும் மாற்றி குமார்

வழங்கும் யோசனைகளை ஏற்குமளவிற்கு அன்றவள் நடந்து கொண்டாள். தன்னுடைய எரிச்சலின் காரணமாக குமாரை விலக்காமல், அதற்கு பதிலாக தான் வளர்த்துக் கொண்ட அமைதியின் காரணமாக குமார் வழங்கிய புதிய யோசனைகளைக் கேட்டுக் கொள்ள முடிந்ததை உணர்ந்தாள். (**பின்னால் அந்த யோசனைகள் அந்த பிராஜெக்ட் வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு எவ்வளவு உதவியாக இருந்தது என்பதையும் உணர்ந்தாள்**.)

திட்டத்தின் துவக்கத்தில் அவளுக்குப் பிடித்தமில்லாத வேலைகள் கொடுக்கப்பட்டபொழுது, அவற்றை அவள் அலட்சியம் பண்ணியிருந்தாள். பின்னர்தான் அந்த வேலைகள் அத்திட்டம் வெற்றிபெற எந்த அளவிற்கு உதவியாகவிருந்தன என்பதை அவளால் உணர முடிந்தது.

இத்தகைய நிகழ்ச்சிகள் நடக்கும்பொழுது ஒரு கட்டத்தில் அவள் Growth Online உடைய Website அதாவது இணையதளத்தைப் பார்வையிட்டு நம்முடைய மறுப்புகளை (reluctance) முறியடிக்கும் அவசியத்தைப் பற்றிப் படித்திருந்தாள். பயத்தாலோ, அவ நம்பிக்கையாலோ, அறிவின்மை மற்றும் திறமையின்மையாலோ நாம் சந்திக்க விரும்பாத சூழ்நிலைகளை வாழ்க்கை நம்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது என்றறிந்தாள். மேலும் நாம் தேர்ந்தெடுக்கும் சூழ்நிலைகளைவிட வாழ்க்கை தானாகக் கொண்டு வருவது மேலும் முக்கியமென்று உணர்ந்தாள். சில சூழ்நிலைகளை துவக்கத்தில் தவிர்த்தபொழுது எப்படி அச்செயல் தனக்குச் சிரமங்களைக் கொண்டு வந்தது என்பதை உணர்ந்த பின்பு, திட்டத்தில் வாழ்க்கை புதிதாகக் கொண்டு வரும் சூழ்நிலைகளில் அக்கறை காட்டினாள். அதாவது சூழ்நிலையைத் தவிர்க்காமல் அதை ஏற்றுக் கொண்டாள். **அப்படிச் செய்த பொழுது முன்னேற்றம் அதிகரித்தது.** மேலும் எந்த வேலையைச் செய்வதற்குப் பயந்தாளோ அதே வேலை அவள் நினைத்ததைவிட சிறப்பாக நடந்தது.



இந்தளவிற்கு வந்துவிட்ட பிறகு மனோபாவத்தில் மாற்றம் கொண்டு வருவதென்ற விஷயத்தில் சாந்திக்கு உண்மையிலேயே ஆர்வம் பிறந்தது. இப்பொழுது லலிதாவைப் பார்க்கும்பொழுது வெளியில் மட்டுமில்லாமல் தன் மனதிற்குள்ளும் ஒரு மாற்றத்தை உணர்ந்தாள். Life Response பற்றிய கருத்துகள் வெறும் தத்துவங்களில்லை என்று அவளுக்குப் புரிந்தது. நடைமுறையில் அவளுடைய வாழ்க்கையில் அக்கருத்துகள் நிறைய மாற்றங்களைக் கொண்டு வந்து கொண்டிருந்தன. (**அதுவும் குறிப்பாக மனநிலை மாறும்பொழுது வெளியிலிருந்து மந்திரமாயம்போல் response வருவது அவளுக்கு விந்தையாகவிருந்தது**.) இப்படியெல்லாம் சிந்திக்கும்பொழுதே தன்னுடம்பிற்குள் புது எனர்ஜி வருவதை அவளால் உணர முடிந்தது.

இதே நினைவுகளுடன் தன்னுடைய அலுவலகத்திற்கு வந்து தன்னுடைய இருக்கையில் அமர்ந்து தனக்கு அன்று “E-mail” வந்துள்ளதா என்று பார்க்க முடிவு செய்தாள். அப்பொழுது உடனடியாக connection button என்பதை அழுத்தாமல், தான் செய்யப்போகும் வேலையை அன்னைக்குச் சமர்ப்பணம் செய்தாள். சமர்ப்பணத்தைப் பற்றி படித்திருந்ததால் இந்நேரம் அதைச் செயல்படுத்திப் பார்க்கலாமே என்றவளுக்குத் தோன்றியது. சில நிமிடங்கள் கழித்து E-mailஐத் திறந்து பார்த்தபொழுது தன்னுடைய மேற்பார்வையாளர் இடமிருந்து ஒரு செய்தி வந்திருப்பதைக் கண்டாள். அதைத் திறந்து படித்தபொழுது தன்னை ஒரு உயர்மட்ட மீட்டிங்கிற்கு அழைத்திருப்பதை அறிந்தாள். அந்த meeting இன்னும் அரை மணி நேரத்தில் துவங்கவிருப்பதையும் அறிந்தாள்.

மீட்டிங்கிற்குப் போவதைப் பற்றி அவளுக்கு ஒரு பக்கம் தயக்கமிருக்கத்தான் செய்தது. ஏனென்றால் அந்த மீட்டிங்கில் பேசவிருக்கின்ற விஷயங்களைப் பற்றி அவளுக்கு முன்னனுபவம் கிடையாது. இருந்தாலும், சற்று முன்னர் பயன்படுத்திய

சமர்ப்பணத்தை மீண்டும் செய்துவிட்டுத்தான் மீட்டிங் நடக்குமறைக்குள் நுழைந்தாள்.

ஒரு மணி நேரம் கழித்து வெளியில் வந்தபொழுது மீட்டிங் எவ்வளவு நல்லபடியாக நடந்ததென்பதை நினைத்துப் பார்த்து வியந்தாள். மீட்டிங்கில் பேசப்பட்ட விஷயங்கள் எல்லாம் தெளிவாகவிருந்தன. எல்லோரும் ஒத்துழைத்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக அவள் அந்த மீட்டிங்கில் நிறைய பங்கேற்றாள். **அன்னைக்கு சமர்ப்பணம் செய்வது உண்மையிலேயே வேலை செய்கிறதென்பதை நன்றாகவே உணர்ந்தாள்.**

மதிய உணவிற்குப் பிறகு சாந்தி மீண்டும் தனது அலுவலகத்திற்கு வந்து தன்னுடைய பெரிய திட்டம் சம்பந்தப்பட்ட வேலையில் ஈடுபட்டாள். தன்னுடைய Microsoft Project Manualஐத் தேடினாள். அதைக் கண்டுபிடிப்பது சிரமமாகவிருந்தது. அப்பொழுது ரமா என்ற சக பணியாளர் எதேச்சையாக அங்கு வந்தாள். சாந்தி குழம்பிப் போயிருப்பதைக் கவனித்தாள். சாந்தி அவளைப் பார்த்து, 'இங்கு எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை' என்று வருத்தப்பட்டுக் கொண்டாள். ரமா அதைக் கேட்டு அனுதாபத்துடன் புன்னகை செய்தாள். 'உனக்கு எல்லாம் சுலபமாக இருக்கிறது. ஏனென்றால் நீ எல்லாவற்றையும் முறையாகச் செய்வாய். ஆனால் இவ்விடமோ குப்பையாகவிருக்கிறது' என்று குறைபட்டுக் கொண்டாள். சாந்தி தன்னுடைய ஆசனத்தில் சரிந்து அமர்ந்தாள். இப்பொழுதே ஏதேனும் செய்ய வேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது. மீண்டும் Growth Online Websiteஇல் உள்ள Personal Organisation என்ற பிரிவைப் பற்றி அவளுக்கு நினைவு வந்தது. அப்பிரிவை, தான் மீண்டும் பார்த்துப் படிக்க வேண்டுமென்று தனக்கொரு நோட் போட்டுக் கொண்டாள்.

ஒரு மணி நேரம் கழித்து தன்னுதவியாளர்கள் இருவரிடமும் தனக்குச் சிறிது அமைதி தேவைப்படுகிறதென்று சொல்லிவிட்டுக்



கம்பெனியினுடைய நூலகத்திற்குச் சென்றாள். அங்கிருந்த ஒரு கம்ப்யூட்டரின் முன்னமர்ந்து Growth Online Websiteஇல் பர்சனல் ஆர்கனைஷேஷன் என்ற பிரிவிற்கு நேரடியாகப் போனாள். அப்பிரிவில் அவளுடைய கவனத்தை ஈர்த்தவை பின்வரும் விஷயங்களாகும்.

- ⋆ நாமிருக்குமிடம், நாம் செய்யும் வேலை சம்பந்தப்பட்ட பேப்பர்கள் மற்றும் நம்முடைய பணவரவு, செலவு கணக்குகள் என்றிவற்றை நாம் முறைப்படுத்தும் விதம்,
- ⋆ நம்முடைய நேரம், நம்முடைய வேலைக்காக நாம் போடும் work schedules போன்றவற்றை நாம் கையாளும் விதம்.

இவ்விஷயங்களை அவள் குறித்துக்கொண்டு இவ்விடங்களில் எல்லாம் தன் வாழ்க்கையில் தவறாகப் போனவற்றை நேர்பண்ணிக் கொள்வதென்று தீர்மானித்தாள். அடுத்த நிமிடம் அவள் நிமிர்ந்து பார்த்தபொழுது குமாரைக் கண்டாள். அவளைத் தேடிக் கொண்டு தான் அங்கு வந்ததாகச் சொன்ன குமார் உனக்கொரு நல்ல செய்தி கொண்டு வந்துள்ளேன். நீ சம்பந்தப்பட்டுள்ள projectஇன் முதற்கட்டம் மூன்று நாள் முன்னதாகவே முடிந்துவிட்டது என்றறிவித்தான். இதைக் கேட்டு சாந்திக்கு சந்தோஷம் அதிகரித்தது. அப்பொழுதுதான் தன்னுடைய செயல்பாடுகளை முறைப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று தான் தீர்மானத்திருந்ததை நினைவு கூர்ந்தாள். மனோபாவத்தை மாற்றிக் கொள்வது என்று முடிவு செய்யும்பொழுது உடனே Life responseஇல் அது தெரியும் என்று தான் படித்தது நினைவிற்கு வந்தது. இப்படி தன்னுடைய திட்டத்தின் முதற்கட்டம் மூன்று நாள் முன்னதாகவே நிறைவேறியது என்று தனக்கு உடனடியாக கிடைத்த செய்தி தான் படித்ததை உறுதிபடுத்துவதாக அமைந்தது.

சாந்தி மீண்டும் தன்னுடைய வழக்கமான வேலைகளுக்குத் திரும்பினாள். நடந்த நிகழ்ச்சிகளால் மிகவும் மகிழ்ச்சியடைந்திருந்த

அவள் மெதுவாகத் தனக்குள்ளேயே பாட்டுப் பாடத் துவங்கினாள். இருக்கையிலிருந்து எழுந்தவள் மேசையின் ஓரத்தில் காலை இடித்துக் கொண்டாள். கால் உடனே வலித்தது. தன்னுடைய காலுக்கு ஊறு விளைவித்துவிட்டோமோ என்ற பயம் அவளுக்கு வந்தது. பிறகு சுதாரித்துக் கொண்டு தனக்கு அடிபட்டுவிட்டதென்ற எண்ணத்தை மனதிலிருந்து விலக்கினாள். அதன்பிறகு அடிபட்டதைப் பற்றி தனக்கு வலிக்கவே இல்லை என்றுணர்ந்தாள். மேலும் அடிபட்டதை நினைத்துக் கொண்டிருந்தால் வலி அதிகமான பழைய சம்பவங்களையும் நினைத்துப் பார்த்தாள். இம்மாதிரியே மீண்டுமொரு நாள் இடுப்பில் வலியேற்பட்டபொழுது அதை அலட்சியம் செய்த பொழுது அவ்வலி விலகியதைக் கண்டாள்.

அன்று மாலை அலுவலகத்திலிருந்து வீடு திரும்பும் வழியில் தன் வாழ்க்கை எப்படித் தன் கட்டுப்பாட்டிற்குள் வந்து கொண்டிருக்கிறதென்பதை உணர்ந்தாள். வாழ்க்கையின் ரகசியங்களை அறிந்து கொள்வதில் கிடைத்த மகிழ்ச்சி அவளுடைய ஜீவனுக்கு மேலும் மெருகேற்றியது. இப்படித் தன் வாழ்க்கையை முறைப்படுத்திக் கொள்வதோடு மேலும் இந்த வாழ்க்கை ரகசியங்களைத் தொடர்ந்து தெரிந்து கொள்ள வேண்டுமென்று உறுதி பூண்டாள். அதாவது இதுவரை என்ன சாதித்துள்ளோம், எப்படிச் சாதித்தோம், மேலும் என்ன சாதிக்கப் போகிறோம் என்பதை எல்லாம் அறிய ஆவல் கொண்டாள். Life Responseகளை எப்படிக் கொண்டுவருவது, தினசரி வாழ்க்கையை எப்படி அவற்றால் நிரப்புவதென்றல்லாம் சிந்தித்தாள்.

இச்சிந்தனைகளுக்குப் பிறகு ஒரு மௌனம் அவளிடம் குடிகொண்டது. எண்ணங்களையும், உணர்வுகளையும் தாண்டிய நிலையிலிருந்த அம்மௌனம் தெய்வ சாந்நித்தியத்திற்கு அவளை அழைத்துச் சென்றது.

❊ ❊ ❊





# ஸ்ரீ அரவிந்தர் கண்ட கனவு

யோகி எந்த வேலையை வேண்டுமானாலும் கற்கும் திறன் உடையவர் என பகவான் கூறியுள்ளார். அதனால் அவற்றைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்ற அவசியமில்லை. தாம் செய்யும் வேலைக்குரிய திறமைகளை மட்டுமே யோகி பெறுகிறார். கனவில் எதிர்காலம் முழுவதும் தெரிவது ஒரு யோக சாதனை. இதைத் தியானத்திலும் பெறலாம். தாம் இவற்றைத் தமக்கு முக்கியமாகக் கருதவில்லை எனவும், இதுபோன்ற திறமைகளை அன்னையிடம் விட்டுவிட்டதாகவும் கூறுகிறார். வெகுதூரத்தில் பேசுவது அன்னைக்குக் கேட்கும் என்கிறார்.

சில கனவுகள் கனவில் கண்டபடி பலிக்கும் என்று ஸ்ரீ அரவிந்தர் சொல்கிறார்.

**கனவில் ஒரு விஞ்ஞானியும், மந்திரவாதியும் உள்ளனர். இருவரும் எதிரிகளிடமிருந்து ஒரு பெண்ணைக் காப்பாற்ற முனைகின்றனர். மந்திரவாதி (Psychic and mental man) ஆத்ம விழிப்புள்ளவன். அவனுக்கு விஷயம் தெரியும். தெரிவதைப் பயன்படுத்தும் முறை அறியாதவன். ஆத்மாவைப் புரியும். அது செயல்படும் விவரம் தெரியாது.**

**விஞ்ஞானி பெண்ணைக் காப்பாற்ற முயன்றான். மந்திரவாதியும் முயன்றான், மந்திரவாதியால் முடியவில்லை. விஞ்ஞானி முயலும்பொழுது கத்திக் குத்தால் எதிரி காயப்படாதது அவனுக்குப் புரியவில்லை. எதிரிகள் அரச பீடத்தை நோக்கிப் போகின்றனர். பிறகு அவர்கள் ஓடிவிட்டனர். பெண்ணை அழைத்துக் கொள்கின்றனர். விஞ்ஞானி geologist பூமி நூல் நிபுணன்.**

**எதிரிகள் ஓடியபொழுது அவர்கள் பொருள்களை விட்டுவிட்டுப் போகின்றனர். தலை நகரத்திற்குக் காயத்துடன் போக விரும்பவில்லை. விஞ்ஞானி geologyயைப் பற்றிப் பெரிய புத்தகத்தைக் காண்கிறார். இந்த அறையில் பாதி அளவுள்ள புத்தகம். பெண் புத்தகத்துள்ளிருக்கிறாள். அது புவியின் இரகஸ்யம், அடையாளமாகக் (symbolic) காணப்படுகிறது.**

இந்திய விஞ்ஞானம் பூமியில் புதைந்துள்ளது எனில் நம் உடலுள்ளிருக்கிறது என்று கொள்ளலாம். பெண் சரஸ்வதி. எதிரிகள் பிரிட்டிஷ் அரசாங்கம். பெரிய சைஸ் புத்தகம் அளவு கடந்த ஞானம் அதனுள்ளிருப்பதாகும். கத்திக்குத்தால் எதிரி பாதிக்கப்படவில்லை என்பது விஞ்ஞானிக்கு ஆச்சரியம் தருகிறது. அவை ஆவி உருவங்கள் என்பதால் கத்திக்குத்தால் உயிர் போகாது. நாடு விழித்துக் கொண்டது. மந்திரவாதி என்பது நாட்டின் ஆன்மீக ஞானம். அதற்கு வழிவகை (process) தெரியவில்லை என்றால், வாழ்க்கைக்குப் பயன்படும் வழியறியாத ஆன்மீகம் அது. எதிரிகள் ஓடிவிடுவது இந்தியருக்கு வெற்றி.

- ★ நாட்டில் ஞானம் ஏராளமாக இருந்தாலும் விஞ்ஞானமும், ஆன்மீகமும் இருந்தாலும், அவை வாழ்க்கைப் பயனை அளிப்பதாக இல்லை என கனவு கூறுகிறது.
- ★ ஆத்ம சக்தி வாழ்க்கையை வளப்படுத்த வேண்டும் என்பது கனவின் வித்து.

❊ ❊ ❊

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு விஷயத்தை பற்றியோ அல்லது ஒருவரைப் பற்றியோ மனம் நினைப்பது, மனதில் அவர் மீது ஆசையிருப்பதைக் குறிக்கும். தாமே அவை நம்மை நோக்கி வருவது ஆசையில்லாததைக் குறிக்கும்.

*ஆசை நினைவைத் தரும்.*



## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

அண்ணன் - நீ அவர் மனநிலையை உலகத்து மனநிலை என ஏற்று, அதுவே உன் மனநிலை எனவும் ஏற்று சமர்ப்பணம் செய்தால் பலனிருக்கும். நாமெல்லாம் அன்னைக்கு அவர் போலவே. வாழ்நாள் முழுவதும் பகவானும், அன்னையும் அதைச் செய்தனர். நீ அப்படிச் செய்தால் அன்னை செய்வது போலாகும். யோக வாழ்வை ஏற்பது என்றால் பிறர் வாழ்வை நம் பொறுப்பாக ஏற்பதாகும். It is to accept consciousness responsibility. செய்வது பெரிது. செய்வதானால், அவரிடம் சொல்லாமல் செய்ய வேண்டும்.

தம்பி - என் நண்பனிடம் இதை முயன்றேன். 1½ வருஷம் பெரும் பலனிருந்தது.

அண்ணன் - தொடர்ந்து செய்தால், அளவு கடந்தால், அவரால் தொந்தரவு வரும்.

தம்பி - அவர் அதற்குள் ஊரை விட்டுப் போய்விட்டார்.

அண்ணன் - தத்துவத்தைப் புரிந்து கொள்ளவும், நடைமுறை நம்மைப் பாதிக்காத அளவிலும் பயில்வது சரியாகும். Service must be impersonal, never personal. சேவை என்பதைப் பொதுவாகச் செய்ய வேண்டும். குறிப்பிட்டவருக்குச் செய்யக் கூடாது. அது நமக்குப் பொறுப்புள்ள இடத்தில் மட்டும் செய்யலாம். நாடு சுபீட்சமடைய நினைத்தால், அப்பலன் தெரியும்.

தம்பி - அது எல்லா விஷயங்களிலும் தவறாமல் நடக்கிறது.

அண்ணன் - எல்லா அன்பர் மனத்தில் எழும் நல்ல எண்ணங்களை அன்னை உலகில் பொதுவாகப் பூர்த்தி செய்கிறார். நாம் அதைக் கவனிப்பதில்லை.

தம்பி - ஏன் பல பேர் அப்படிச் சொல்கிறார்களே?

அண்ணன் - நல்ல எண்ணம் தவறாது பலிக்கும். **நாம்** செய்கிறோம், **நாம்** செய்ய வேண்டும் என்ற நினைவு வரக்கூடாது. அதுதான் தவறு. பக்கத்து வீட்டுக்காரர் வம்பு பேசுபவர்.

தம்பி - அவர் வம்புக்காரர் என்பதால்தான் எனக்கு அவர் முக்கியம். ஏன் இவர் நம்மைச் சந்திக்கும்படி அமைந்தது? இவரை மாற்றக் கூடாதா? என நினைக்கிறேன்.

அண்ணன் - உனக்கும் அவர் குணம் கொஞ்சம் உண்டு. அதனால் தான் அவர் வருகிறார்.

தம்பி - அப்படியானால் அவரை மாற்ற முயல்வதைவிட, என் குணத்தை மாற்றினால், அவர் வரமாட்டார் அல்லது மாறிவிடுவார்.

அண்ணன் - நல்ல எண்ணம் அரிது. நல்ல எண்ணமுள்ள இடத்திலும் அது குடும்பம் முழுவதும் இருக்காது. நல்லெண்ணத்திற்கு எதிராக நம்மிடம் உள்ள குணத்தை நம்மால் அறிய முடியாது. அன்பரொருவர் அதை அறிய முற்பட்டால், அவருடைய முன்னேற்றத்திற்கு அளவில்லை.

தம்பி - அது பல ரூபங்களில் பல காரணங்கட்காக எழுகிறது. நல்லவர் எனப் பலராலும் கருதப்படுபவரிடமே அக்குறை எழுகிறது. நல்லவர்கட்கு தங்கள் முக்கியத்துவம் - பெருமை - சில விஷயங்களில் எழுந்து கெட்டவராக்கி விடும்.



**அழியா இலக்கியம் :**

அண்ணன் - அழியா இலக்கியம் எப்படி ஏற்படுகிறது, ஷேக்ஸ்பியர் எப்படி உயர்ந்த நாடகங்களை இயற்றினார் என ஸ்ரீ அரவிந்தர் எழுதியுள்ளார். இறந்தவருடைய ஆவி ஏன் உலவுகிறது என அக்கருத்தை முடிக்கிறார். கவி, பாத்திரங்களை ஏற்படுத்துகிறான். தற்கொலை செய்பவன் ஆவி உருவத்தை ஏற்படுத்துகிறான். பாத்திரம் அறிவுக்குப் புரியும். ஆவிகள் புலனுக்குத் தெரியும். மனிதனால் ஜட உலகத்தில் உற்பத்தி செய்யும் திறனைப் பெற முடியவில்லை என உபநிஷதம் கூறுகிறது. அதாவது மனிதனுடைய கற்பனை ஓர் நாற்காலியைப் போன்ற ஜடப்பொருளை உற்பத்தி செய்ய முடியாது. இப்பகுதியிலுள்ள கருத்தைப் பயன்படுத்தி நான், "மனிதனுடைய கற்பனை அறிவு அவனுக்குரிய எதிர்காலத்தை ஏற்படுத்த வல்லது" எனக் கூறப் பிரியப்படுகிறேன்.

தம்பி - Vol 12 Centenary setஇல் பக்கம் 33 முதல் 43 வரையுள்ள பகுதியைத் தானே குறிப்பிடுகிறீர்கள்.

அண்ணன் - ஆம்.

தம்பி - என்ன கூறுகிறார் எனச் சுருக்கமாகச் சொல்ல முடியுமா?

அண்ணன் - நான் ஷேக்ஸ்பியரைப் பற்றிப் பேசாமல், அன்பருக்குரிய கருத்தை மட்டும் கூறுகிறேன். மூலத்தைப் படித்தால் ஷேக்ஸ்பியர் விளங்கும்.

தம்பி - நான் அமரகாவியமாக முயலவில்லை. உயர்ந்த அன்னை வாழ்வை மட்டும் அறிய விரும்புகிறேன்.

அண்ணன் - நம் உடல் ஜடம், எண்ணம் சூட்சுமம், சத்திய ஜீவியம் காரண தேகம் (causal body). கையால் செய்யும் வேலை அழியக் கூடியது. எண்ணம் நீண்ட நாள் நிலைக்கும். காரண தேகத்தால் செய்வது அழியாது.

தம்பி - எண்ணம் எப்படி?

அண்ணன் - எண்ணத்தில் இரு பகுதிகளுண்டு. தாழ்ந்தது ஜடம் (gross thoughts). உயர்ந்தவை சூட்சும எண்ணங்கள் (subtle thoughts). வீடு, நிலம், கடை, பொருள்களைப் பற்றி நினைப்பவை தாழ்ந்தவை. பண்பு, இலக்கியம், ஆன்மா பற்றி நினைப்பவை உயர்ந்தது.

**எண்ணம் உயர்ந்து சூட்சுமமாகிவிட்டால் அது அழியாது.**

**உயர்ந்த எண்ணம் காரண தேகத்தை எட்டினால் அது அமரத்துவம் பெறும்.**

கவியின் எண்ணம் உயர்ந்து சூட்சுமமானால், அது அமரகாவியமாகும். ஷேக்ஸ்பியர் அப்படி எழுதினார்.

தம்பி - அமரகாவியத்திற்கும், அன்பர் வாழ்வுக்கும் என்ன சம்பந்தம்? நாமெல்லாம் ஷேக்ஸ்பியர் ஆக முடியுமா?

அண்ணன் - ஷேக்ஸ்பியர் உலகுக்கு அமரகாவியம் எழுதினார். நாம் அன்னையின் அருளால் நம் வாழ்வை அமர காவியமாக்க முடியும்.

தம்பி - நம்ப முடியவில்லையே.

அண்ணன் - இது அன்பர் வாழ்வில் அடிக்கடி நடக்கிறது. நாம் புரிந்து கொள்வதில்லை. அமர காவியம் என்றால் என்ன? இதுவரை உலகில் இல்லாத ஒன்றை நாம் நம்மைக் கடந்தது என்கிறோம். மனிதனைக் கடந்தது அமரத்துவம் வாய்ந்தது. காரியங்கள் கூடி வரும் பொழுது சட்டம் நமக்காக மாறுகிறது. ஓர் அன்பருக்காக



சட்டத்தையே மாற்றும் அருள் அமரத்துவம் வாய்ந்ததல்லவா?

தம்பி - ஆம். அமரத்துவமில்லாமல் நடைமுறையை மாற்ற முடியாது. அன்பர்கட்கு காரியம் கூடி வரும்பொழுது நடைமுறையிலில்லாத வழியாகவே வருகிறது. நான் இப்படிப் புரிந்து கொள்ளவில்லை.

அண்ணன் - அருள் அமரத்துவம் வாய்ந்தது. நம் வாழ்வில் அப்படிச் செயல்படுகிறது. நாம் பலனை மட்டும் கருதுவதால், அதன் தன்மையைக் காண்பதில்லை.

தம்பி - சரி, அமரத்துவம் நமக்கு என்ன செய்யும்?

அண்ணன் - நம் எதிர்காலத்தை நாம் மனதில் உருவாக்கும் பொழுது, வீடு கட்டுவோம், பணம் சம்பாதிக்க வேண்டும், பதவி வேண்டும் என்று நினைத்தால் வீடு ஜடமானது, பணமும், பதவியும் ஆசைக்குரியன. இவை தாழ்ந்த எண்ணங்கள், ஜடமானவை. அழியக் கூடியவை. மனிதன் உயர்வாக, இனிமையாக, சுத்தமாக, வசதியாக வாழ வேண்டும். அதற்குரிய பணவசதி வேண்டும் என்பது இலட்சியமான எண்ணம். இலட்சியம் ஜடமன்று, சூட்சுமம், காரணமுமாகக் கூடியது. நாம் நம்மை உடலாகக் கருதினால் அது ஜடமான அறிவு. ஆன்மாவாகக் கருதினால் சூட்சுமமான அறிவு. சைத்தியப் புருஷனாகக் கருதினால் காரண லோகத்திற்குரிய அறிவு. எண்ணம் உயர்ந்தால் அதன் சூட்சுமம் உயர்ந்து சத்திய ஜீவியக் கருத்தாகும். பொதுவாகச் சொந்த வசதியை நாடுவது ஜடமான அறிவு. அனைவரும் உயர்ந்த வாழ்வை அடைய விரும்புவது சூட்சுமமான அறிவு. அது நாட்டுக்கும், மனித குலத்திற்கும் உரிய அறிவானால் தொடர்ந்து உயருகிறது.

தம்பி - ஆசையாக இல்லாமல், லட்சியமாக, அனைவருக்கும், உலகத்திற்குமாக நினைத்தால் கற்பனை ஜடமாகயிருந்து சூட்சுமமாகி விடுகிறது.

அண்ணன் - சூட்சுமத்தில் உண்மையிருந்தால், நம்மைப் பொருத்த வரையில், அந்த எண்ணம் பலிக்கும் திறன் பெறுகிறது. அன்னை மீது நம்பிக்கையிருந்தால் எண்ணம் அமரத்துவம் பெறுகிறது. அதாவது எதிர்காலத்தில் பலித்துவிடும்.

தம்பி - என் எதிர்காலத்திட்டத்தை நான் இலட்சியமாக, ஆசையின்றி, தீட்டினால், அருள் அதனை நிறைவேற்றுகிறது என்கிறீர்களா?

அண்ணன் - ஆம். ஷேக்ஸ்பியர் உலகுக்கு அமரகாவியம் வழங்கினார். நாம் நமக்கு எதிர்காலத்தில் உயர்ந்த வாழ்வைத் தரமுடியும்.

தம்பி - நம் எண்ணம் இலட்சியமானதால், நமக்குப் பலிப்பது மற்ற அனைவருக்கும் பலிக்கிறது.

அண்ணன் - நாம் செய்ய வேண்டியது என்ன? Create a realistic plan. நம் சந்தர்ப்பம், திறமை ஆகியவற்றைக் கருதி நடக்கக்கூடிய திட்டத்தை மனதால் தீட்டினால், அருள் அதை நிறைவேற்றும்.

தம்பி - நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். நடக்கக் கூடியதாக இருக்க வேண்டும், ஆசையால் செயல்படக் கூடாது, திறமையின் அடிப்படையில் திட்டம் இருக்க வேண்டும்.

அண்ணன் - அது பூர்த்தியாகும்பொழுது நாம் தீட்டிய அளவிலிருக்காது. எந்த அதிகபட்ச அளவில் பூர்த்தியாக வேண்டுமோ, அந்நிலையில் பூர்த்தியாகும். அதுபோல் திட்டங்கள் 15 மடங்கு, 24 மடங்கு, 365 மடங்கு உபரிப் பலனைத் தந்துள்ளன.

தம்பி - சூட்சுமம் நிபந்தனையிலிருக்கிறது.



அண்ணன் - நிபந்தனைகள் முக்கியம் என்பதில் சந்தேகமில்லை. மீண்டும் தெளிவாக, சுருக்கமாகக் கூறினால், ஓர் அன்பர் இலட்சிய மனப்பான்மையுடன், திறமையின் அடிப்படையில் எதிர்காலத் திட்டத்தை கற்பனை செய்து சமர்ப்பணம் செய்தால், அத்திட்டம் அபரிமிதமாகப் பூர்த்தியாகும்.

தம்பி - ‘தான்’ என்பது எழக்கூடாது, போட்டி, பொறாமை, கர்வம், அதிகாரம் வரக்கூடாது என்பது முக்கியம்.

**கற்பனை :**

அண்ணன் - அதெல்லாம் நாம் சொல்ல வேண்டியதில்லை. அது உள்ளவரிடம் எனக்கு வேலையில்லை. ஒரு பொய் சொன்னால் அத்தனையும் மறைந்துவிடும். பொய் சொல்லக்கூடாது என்று சொல்லும் கடமை என்னுடையதன்று. கற்பனை செய்தால் போதுமா, நாம் எந்த முயற்சியும் எடுக்க வேண்டாம் என்றும் நினைப்பார்கள்! அவர்களை நாம் கருத வேண்டாம். விஞ்ஞானி அன்பரானால், 5th dimension சூத்திரம் தெரியும் என்றேன். அது ஐன்ஸ்டீன் நிலை. குடும்பம் நடத்துபவர் தூய்மையானவரானால், வளமான எதிர்கால வாழ்வு அமையும் என்பதும், கவியான அன்பர் அமரகவியாகலாம் என்பதும் ஒரே மாதிரியான கருத்துகள்.

மனித வாழ்வில் நம்மை 10 நிலைகளிலும், ஷேக்ஸ்பியர், ஐன்ஸ்டீனை 100ஆம் நிலையிலும் வைத்து கணக்கிட்டால், அருள் தூய்மையான அன்பரை 100ஆம் நிலைக்கு உயர்த்தும்.

*தொடரும்...*

❊ ❊ ❊

## சொசைட்டியின் வெளியீடுகள்

**கர்மயோகியின் நூல்கள் :**

| | | |
|---|---|---|
| 1. | பிரார்த்தனையும் சமர்ப்பணமும் | ரூ. 20 |
| 2. | மனம் - ஜீவனின் முக்கிய கரணம் | ரூ. 20 |
| 3. | சமூகம் அதிர்ஷ்ட சாகரம் | ரூ. 20 |
| 4. | சிறியதும் பெரியதும் | ரூ. 20 |
| 5. | கணவன் மனைவி | ரூ. 20 |
| 6. | இரத்தினச் சுருக்கம் | ரூ. 20 |
| 7. | ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம் | ரூ. 40 |
| 8. | ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம் | ரூ.100 |
| 9. | அதிர்ஷ்டம் | ரூ.100 |
| 10. | பேரொளியாகும் உள்ளொளி | ரூ.100 |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவு தபால் கட்டணம் ரூ. 15/- சேர்த்து M.O. செய்யவும்.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சொல்வதற்கு ஒன்றுமில்லை;

செய்வதற்கு ஏராளமானவை உண்டு.

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12 First Cross Extension, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: Karmayogi

## எலிசபெத்தும், டார்சியும்

பிரெஞ்சுப் புரட்சியில் தலைகள் உருண்ட பின், அது போன்ற புரட்சி இங்கிலாந்தில் வரக்கூடாது என குறுநில மன்னர்கள் தம் நிலையினின்று இறங்கி வந்து பல்வேறு வகைகளிலும் தாழ்ந்த மக்களுடன் உறவு கொள்ளும் காலம், கீழுள்ளவர்க்குப் பொற்காலம். அக்காலத்துக் கதை Pride and Prejudice. பெருநிலச்சுவான்தார் டார்சி சிறு நிலச் சுவான்தாரின் மகளான எலிசபெத்தை அழகற்றவள் என்பதையும் மீறி காதலிக்கிறான். இது காலம் அவளுக்குத் தந்த பெரும் பரிசு. அவள் மனம் தறுதலையான அழகனில் தன்னை இழந்து, டார்சியைக் கர்வி எனக் கூறுகிறது. டார்சி, எலிசபெத்தை நோக்கி, “தாழ்ந்தவளானாலும், என்னுள் தணியாத காதலை எழுப்பினாய்” என்றபொழுது எலிசபெத் எரிமலையாக வெடிக்கிறாள். இது உலகம் அறியும் பாதை.

- **டார்சியின் விபரமான கடிதம் கண்டு, எலிசபெத், “நான் காதலிக்கவில்லை. வீண் பெருமைக்கு ஆசைப்பட்டேன். என் குடும்பம் தாழ்ந்தது. அவர்கள் செய்கைகளை நினைக்க மானம் போகிறது. நான் அறிவிலியாய் நடக்கிறேன்” என்று மனம் வெதும்பினாள்.**
- **எலிசபெத் டார்சியைக் கர்வி எனத் திட்டியபொழுது டார்சி வீட்டிற்கு வந்து, “நான் சுயநலமி, திமிர் பிடித்தவன். இவளே என்னைத் திட்டியிராவிட்டால் என் நிலையை எனக்கு எவரும் சொல்லப்போவதில்லை”, என்று மனம் மாறி அவளிடம் வந்து “உன்னால்தான் நான் மனிதனானேன்” என்று அவள் திட்டியதற்கு நன்றி கூறுகிறான்.**

தன் குறையை அறிவது தன்னையறிவது, அதை ஏற்று மனம் மாறுவது திருவுருமாற்றம். மனத்தை நாம் முயன்று மாற்றலாம். செய்ய முன் வருபவரில்லை. மனத்தின் அடியில் உள்ள ஜீவியத்தை நாம் மாற்றமுடியாது. அழைத்தால் அன்னை மாற்றுவார். £ 50 வருமானமுள்ள எலிசபெத்தை £ 10,000 வருமானமுள்ள டார்சி மணக்கிறான். அவள் தமக்கை £ 5000 வருமானமுள்ள பிங்லியை மணக்கவும், ஓடிப் போன தங்கை லிடியாவைக் கண்டு அவளுடன் ஓடியவனை மணக்கச் செய்யவும் டார்சி உதவுகிறான்.

- **தன்னையறியும் மனம் அன்னைக்குத் தகுந்த மனம்.**
- **தானே முன்வந்து மாறும் மனம் அன்பரின் அமுத உள்ளம்.**

## தேடினால் கிடைக்காது பிரார்த்தனை செய்தால் கிடைக்கும்

Ball point pen. இங்க் தீர்ந்துவிட்டது. புது refill போட பழையதை எடுத்து குப்பையில் போட்டபொழுது, சில சமயங்களில் உள்ளேயுள்ள ஸ்பிரிங் தவறுவது வழக்கம். அதனால் கவனமாக அதை எடுத்து வைக்க முயன்றபொழுது, அதைக் காணோம்.

- **ஒரு செகண்டில் எங்குப் போகும், டிரஸ்ஸை உதறிப் பார்த்து விட்டாயிற்று, இல்லை.**
- **உட்கார்ந்த நாற்காலியைப் பார்த்தாயிற்று.**
- **ஒருவர் வந்து நாற்காலி, அதிலுள்ள cushion, ஆகியவற்றைப் பார்த்துவிட்டு உடனே சுற்றியுள்ள இடத்தையும் சுத்தமாகத் தேடியாயிற்று, கிடைக்கவில்லை.**
- **மறு நாள் இடத்தை சுத்தம் செய்யும்பொழுது இருவர் அருகேயுள்ள, பெட்டி, தட்டு, rubber band வைக்குமிடம் ஆகிய அனைத்தையும் மெதுவாகப் பார்த்து ‘இல்லை’ என்று தீர்ப்புக் கூறியபொழுது,**

**தேடினால் கிடைக்காது,**
**பிரார்த்தனை செய்தால் கிடைக்கும் என்றார் ஒருவர்.**

ஐந்து நிமிஷம் பிரார்த்தனையில் பேனா உள்ளே பார்க்கத் தோன்றியது. ஸ்பிரிங் இருந்தது. கிடைத்தது. தொலைத்தவர், “நான் நேற்று இந்தப் பேனாவை தட்டித் தட்டி உள்ளே ஸ்பிரிங் இருக்கிறதா எனப் பார்த்தேனே” என்றார்.

**‘தேடினால் கிடைக்காது, பிரார்த்தனை செய்தால் கிடைக்கும்.’**